ரசு பதிப்பக வெளியீடு, 7.

பங்கஜம்

அல்லது

பார்ப்பனக் கொடுமை.

ஐயங்கார்குளம்

ஸி. லட்சுமணனார் அவர்கள்

இயற்றியது.

குடி அரசு பதிப்பகம், ஈரோடு.

1930

திவு செய்யப்பெற்றது.

R34
N30.
186225

பங்கஜம்

அல்லது பார்ப்பனக் கொடுமை.

முதற்பதிப்பு 2000

ஐயங்கார்குளம்

S. லட்சுமணனார் அவர்கள்

இயற்றியது.

விலை அணா 4.

குடி அரசு பதிப்பகம், ஈரோடு.

1930

உரிமை பதிவு செய்யப்பெற்றது.

"குமரன்" அச்சு நிலையம்,
காஞ்சிபுரம்.
18-6-30

முன்னுரை.

“வந்தே மாதரம் என்போம்—எங்கள்
மாநிலத் தாயை வணங்குதும் என்போம்

ஜாதி மதங்களைப் பாரோம்—உயர்
ஜன்மம் இத்தேசத்தில் எய்தினர் ஆயின்

வேதியர் ஆயினும் ஒன்றே—அன்றி
வேறு குலத்தினர் ஆயினும் ஒன்றே,

ஜாதி மதங்களைப் பாரோம்”

[பாரதியார் சுதேச கீதம்]

I

நூற்கருத்து.

186225

இந்நூலின் பெயரைக் கண்டு, நமது நாட்டின் வயிற்றில், நம்மோடு பிறந்த ஒரு மக்கள் பிரிவினரை, இது இழிவுப்படுத்த வருகின்றது என்று எண்ணிவிடலாகாது. இந்தியத் தாயின் முன்னேற்றத்திற்குப் பெரும் முட்டுக்கட்டையாயிருக்கும் சமூக அடிமைத்தனம் அறவே ஒழியவேண்டும் என்னும் வேட்கையோடேயே, நாட்டுத் தொண்டாக இச்சிறு நூல் எழுதப்பெற்றது.

பிறப்பு ஒன்றனையே அளவுகோலாகக் கருதி மக்கள் தொகுதியை நான்கைந்து பிரிவுகளாக்கியும், ஒரு பிரிவினர் ஏனைய பிரிவினர்க்குக் கடவுளர் என உயர்த்தியும், சமூகத் துறையிலேயும், சமயத் துறையிலேயும், மற்றெந்தத் துறை

யிலேயும் இவ்வுயர்த்தப்பெற்ற "சாமி"களே வழி காட்டிக ளாகவும், ஆசிரியன்மார்களாகவும், மற்ற பிரிவினரால், பொருளும் பிறவும் கொடுத்துப்போற்றத்தக்கவர்களாகவும் இருக்கவேண்டுமென சூட்சி செய்தும், ஆளுவது ஆங்கில அரசாயினும், நெடுநாள் வழக்கத்தின் செருக்கால், தாங் களே அரசாங்கத் துறையிலும் நிறைந்து முன்னிற்கவேண்டு மென்று வீணில் அவாவியும், ஏனைய மக்கள் பிரிவினரிலும் ஒருவருக்கொருவர் உயர்வு தாழ்வு கற்பித்து, தீண்டத்தக்க வர்களென்றும் தீண்டத் தகாதவர்களென்றும் அநியாய வரம்புகள் ஏற்படுத்தியும், இவ்வாறு பொய்ப்பிரிவுகளும், பொய் உயர்வு தாழ்வுகளும், பொய் வரம்புகளும், ஒரு பிரி வினரது சுயநலங்கருதி ஏற்படுத்தப்பட்டன என்று மற்றோர் அறியாவண்ணம், இறைவனே தான் மொழிந்த சாத்திரங் களில் இவ்வாறெல்லாம் இருக்கவேண்டுமெனப் பணித்திருக் கின்றார் என்று, சாத்திரங்களையும் சூத்திரங்களையும் உண் டாக்கியும், நமது மக்கள் தொகுதி இப்போதுள்ள கேவல நிலையை யடையும்படி பாழ்ப்படுத்தி வருகின்ற ஜாதிக் கொடுமை முற்றும் தொலையவேண்டுமென்பதே இந்நூலின் நற்கருத்து.

"ஜாதி இரண்டொழிய வேறில்லை யென்றே
தமிழ் மக்கள் சொல்லியசொல் அமிழ்தம் என்போம்.
நீதி நெறியில் நின்று பிறர்க்குதவும்
நேர்மையர் மேலவர்; கீழவர் மற்றோர்."

[பாரதியார் சுதேச கீதம்]

II

நூற்பொருள்.

நாடக முறையிலே, டன்னிரண்டு களங்களில் எழுதப் பெற்றது இந்நூல். இதிற்போந்த கதை வருமாறு:—

பத்மகிரீச அய்யர் என்னும் ஒரு பஞ்சாங்கப் பார்ப் பனருக்குப் பங்கஜம் என்னும் ஒரு மகள் இருந்தாள். அவள் இயற்கையிலேயே ஆணவம் மிகுந்தவள். அவளுக்கு மணம் செய்வதற்காகப் பத்மகிரீச அய்யர் பல துறையிலும் பொருள் ஈட்ட முயன்றார். பார்ப்பனர் அல்லாத ஏனைய மக்களது இல்லங்களில் நல்லது பொல்லது விரைவாக பல நடந்தாலல்லவா பொருள் கைவருமென்று அவாவியிருந்த அவருக்கு நிறை நெஞ்சம் உண்டாகுமாறு இந்தத் துறை யில் நல்ல பொருள் சேர்ந்தது. பங்கஜத்தை விசேஷம் நடக் கும் வீடுகளுக்கு நேரே அழைத்துச் சென்று ஆடைகளாக வும் ஆபரணங்களாகவும், அவளுக்குப் பல பெற்றுத் தந் தார். நகரங்களிலுள்ள வக்கீல்களுக்குக் கிராமங்களிலுள்ள "கேசு"களைப் பிடித்துக்கொடுக்கும் பழக்கத்தாலும் பணஞ் சேர்ந்துவந்தது. தரும சிந்தை வாய்ந்த நாட்டுக்கோட்டை செட்டிமாரை ஏமாற்றி, சுவர்ணதானம் மாத்திரமேயன்றி கொழுத்த பூதானமும் தன் மகள் பேரில் பெற்று பத்திர மும் ரிஜிஸ்தர் செய்து வாங்கிக்கொண்டார்.

இது ஒரு புறம் நடக்க, அடுத்த ஊரிலிருந்த தன் உற வினள் ருக்மணியம்மாளின் வழியாய் ராஜகோபாலன் என் னும் ஒரு வரனுக்கு ஏற்பாடு செய்துவந்தார். ராஜகோபா லன் அப்போதுதான் பி. ஏ., பரீட்சைக்குப் போயிருந்தான்.

மாப்பிள்ளைக்கு வரதட்சணை (ரூ. 2000 என்று) முடிவாயிற்று. பி. ஏ., பரீட்சையில் தேறியதும் கலெக்டர் பரீட்சைக்குப் படிக்கச் (I. C. S.) சீமைக்குப் போய்வரும் செலவை பெண் வீட்டாரே பொறுக்கவேண்டுமென்பதைப் பற்றி சற்று யோசித்துக்கொண்டிருந்தார். ருக்மணியம்மாள் தான் பிள்ளை வீட்டுக்கும் பெண் வீட்டுக்கும் இடைநடந்து கலியாணம் ஏற்பாடாவதற்குத் துணையாயிருந்தாள்.

இது இப்படியாக, பிள்ளையின் தந்தையார், ஆபத்தாரண அய்யர் என்பார் கலியாணத்தின் பேரைச் சொல்லி நெடுநாளாகப் பல செட்டிமாரிடம் சென்று பொருள் சேர்த்துவந்தார். ஒரு கோவைசிய தனவந்தரது இல்லத்தில் சிரார்த்தம் வந்தது. ஐயருக்கு நல்ல வருமானத்திற்கு இடமாயிற்று. செட்டியாரது தொப்பையைத் தடவி நல்ல பணம் பறித்தார். 'பையன் படிக்கின்றான்' என்று சொல்லிப் பலரிடம் சென்று யாசித்துவைத்த பொருளிலேயே ரூ. 3000-க்குமேல் மிச்சம் வைத்திருந்தார்.

இவ்வாறாக, ராஜகோபாலன் பி. ஏ., பரீட்சையில் சிறக்கத் தேறினான். பெண்வீட்டாரும் பிள்ளை வீட்டாரும், ஒத்து வைத்துக்கொண்ட நன்னாளில் முகூர்த்தம் விசேஷமாக நடந்தது. பார்ப்பனர் அல்லாத நண்பர் ஒருவர் ..சியின் கொடுமையால், மணவிருந்தில் நுழைந்துவிடவே அவரைப் புடைக்கப்பெற்றார்.

திருமணம் முடிந்ததும் ராஜகோபாலன் சீமைக்குப் போய்விட்டான். பத்மகிரீச அய்யரும், ஆபத்தாரணய்யரும் ஸ்தல யாத்திரை புறப்பட்டு வடதில்லையில் நாட்டுக்கோட்டை வள்ளல் ஒருவரால் அமைக்கப்பெற்ற பார்ப்பன தர்ம அன்ன சாலையில் தங்கியிருந்தனர். நம் நாட்டுக்கு

சுயராஜ்யம் பெற்றுத் தரும் விஷயமாகப் பிரசங்கம் செய்ய அவ்வூருக்கு வந்திருந்த சத்தியகீர்த்தி அய்யர் முதலியோரும் அந்தச் சத்திரத்திலே வந்து இறங்கினர். பார்ப்பன ராஜீய தந்திரங்களை சத்தியகீர்த்தி அய்யர், ஆபத்தாரண அய்யர் முதலியோருக்கு நன்கு எடுத்து விளக்கினர்.

இரண்டாண்டுகள் கழிந்தன. ராஜகோபாலன் I. C. S. கலெக்டராக வந்துவிட்டான். பார்ப்பனக் கொடியைநாட்டி பங்கஜமே உண்மையில் கலெக்டர் உத்தியோகம் செய்து வந்தாள். பார்ப்பனர் அல்லாதாரை ஒறுத்து அழிக்கவேண்டுமென்று பங்கஜமும் ராஜகோபாலனும் உறுதி செய்து கொண்டு, மேல் நாட்டு முறைபில் சுகமாக வாழ்ந்துவருகிறார்கள். இதோடு கதை முடிகிறது.

இக்கதையைக் கூறிக்கொண்டு போகுமுகத்தான், பார்ப்பனரது பண்புகளும், அவர்கள் ஏனைய தம் உடன் பிறப்பினருக்கு உணர்ந்தோ உணராமலோ செய்துவரும் கொடுமைகள் பலவும் கீழ்வகுத்தவாறு எடுத்துக் காட்டப் பெற்றிருக்கின்றன.

களம் 1. பார்ப்பனரது இயற்கை குலச்செருக்கு. பார்ப்பனர் அல்லாதார் தற்காலம் கண்விழித்து வருவதைப் பற்றிப் பார்ப்பனர் நோக்கம். ஏழை மகளிர் "சூத்திரச்சி" என்றழைக்கப்பெற்று பார்ப்பனர் இல்லங்களில் படும் பாடு.

களம் 2. கருவில் உற்பத்தியாவதற்கு முன்னிருந்து இறந்து பேர் மறந்துபோம் வரையிலும், நேரத்தக்க ருது சாந்தி, கலியாணம், சீமந்தம், பிள்ளைப்பேறு, புண்யாவசனம், நாமகரணம், கர்ணபூஷணம், அக்ஷராப்பியாசம், கருமம், சிரார்த்தம் என்னும் சடங்குகளின் வலையில் ஏமாந்து

சிக்குண்டு பார்ப்பனர் அல்லாதார் பார்ப்பனருக்கு அடிமை களாயிருக்கும் வழக்கம் பணம் பறிப்பதற்குப் பார்ப்பனர் இச்சடங்குகளை எவ்வளவு வேட்கையோடு எதிர்பார்க்கின் றனர் என்னும் உண்மை. இவ்வாறு பொருள் பறித்து பிழைத்தாலும் பார்ப்பனர் அல்லாதாரைத் தீண்டத்தகாதவ ரெனத் தாழ்வாகக் கருதி, ஒரு பிரிவினருக்கும் மற்றொரு பிரிவினருக்கும் உயர்வு தாழ்வு கற்பித்து பார்ப்பனர் அல்லா தாரது ஒற்றுமையை யழித்துவரும் கொடுமை.

களம் 3. கிராமங்களில் உள்ள பார்ப்பனர் நகரங்களி லுள்ள பார்ப்பன வக்கீல்களுக்குக் கமிஷனுக்காக "கேசு" பிடித்துக் கொடுத்துவரும் வழக்கம். பார்ப்பன வக்கீல்களும் வக்கீல் குமாஸ்தாக்களும் ஏழைப் பார்ப்பனர் அல்லாதாரிட மிருந்து கருணையின்றிப் பணம் பறிக்கும் வழிகள். பிள்ளை கள் படிக்கின்றார்கள் என்று சொல்லி பலரிடம் யாசித்துப் பார்ப்பனர் பொருள் குவிக்கும் உண்மை.

களம் 4. தர்ம சிந்தை வாய்ந்த நாட்டுக்கோட்டை செட்டிமாரிடம் பார்ப்பனர்கள் பணம் பறிக்கும் விதங்கள். செட்டிமாரிடமுள்ள பார்ப்பன குமாஸ்தாக்களும் பிறபார்ப் பனரும், செட்டிமாரது உள்ளமறிந்து ஏமாற்றிப் பொருள் பிடுங்கும் தந்திரங்கள்.

களம் 5. எல்லார்க்கும் பொதுவாய் பரம்பொருளை வழி பட அமைத்திருக்கும் ஆலயங்களில் பார்ப்பனர் தங்கள் பேராசைச் சுங்கங்களை ஏற்படுத்திக்கொண்டு உள்ளம் உருகி வழிபாடியற்றவரும் அடியவரை நடத்தும் கேவல விதம். நாட்டுக்கோட்டை செட்டிமார் தர்மம் செய்ய முன்வரு கிறார்களென்பதை யறிந்து அவர்களை ஏமாற்றி, சாமியின் பேரைச் சொல்லி பொருள் பறிக்கும் வகை.

OFFICE OF THE REGISTRAR
3 - OCT 1930

களம் 6. கேட்டவர்க்கு இல்லையென்னாது கொடுக்கும் செட்டிமாரிட அன்பிற்குப் பார்ப்பனர் அல்லாத ஏழை மாணவர்களும், அறம் விரும்பியோரும், ஆளாகா வண்ணம் அவரிடமுள்ள பார்ப்பன குமாஸ்தாக்கள் விரட்டியடிக்கும் விதம். சுயநலங்கருதி செட்டிமாராது தலையைத் தடவ எடுத்துக்கொள்ளும் முயற்சி.

களம் 7. அரசாங்க மன்றங்களிலும் பார்ப்பனர் தங்கள் குலத்தாருக்குச் செய்துகொள்ளும் சௌகரியங்கள். மற்றவர்களை நடத்தும் கேவலம். பார்ப்பனர் அல்லாதார் மேல் நோக்கமுறுவதையும், தங்களுக்கே உரியவென எண்ணிய அரசாங்க உத்தியோகங்களைப் பார்ப்பனரல்லாதார் பெறுவதையும் கண்டு பார்ப்பனர் படும் வயிற்றெரிச்சல்.

களம் 8. புகைவண்டி இலாகாவில் பார்ப்பனர் குவிந்துகொண்டு, தங்கள் குலத்தாருக்கு வேண்டிய சௌகரியங்கள் செய்துகொண்டும் மற்றூருக்கு இடைஞ்சல் விளைத்துக்கொண்டும் இருக்கும் உண்மை. தருமம் செய்து புண்ணியம் சம்பாதித்தலில் கருத்துடைய கோவைசிய செட்டிமாரைப் பார்ப்பனர் ஏய்த்துப் பொருள் பறிக்கும் வழி. பார்ப்பனர் அல்லாத விருந்தினரை, "அதிதி தேவோ பவ" என்கிற உபநிஷத்து வாக்கியத்திற்கு மாறாக நடத்தும் அநியாய விதம். சிரார்த்த காலங்களிலும் பிறகாலங்களிலும் ஒரு பார்ப்பனர் பல பார்ப்பனரைத் தானம் பெற அழைத்து வருவதிலுள்ள ரகசியங்கள்.

களம் 9. பள்ளிக்கூடங்களில் பார்ப்பன ஆசிரியர் நிறைந்துகொண்டு பார்ப்பனர் அல்லாத சிறுவர்களை ஓங்க ஒட்டாமல் செய்யும் வழிகள். சுயமரியாதை இயக்கத்தின் மாட்டு பார்ப்பனர் கொள்ளும் அச்சம்.

களம் 10. பசியால் உயிர் துறக்கும் தருவாயில் இருப்பினும் பார்ப்பனர் அல்லாதாருக்கு அன்ன தானம் செய்ய எண்ணுப் பார்ப்பனரது வன்னெஞ்சம்.

களம் 11. அரை வயிறும், கால் வயிறும், பட்டினியும் கிடக்கும் ஏழை இந்தியர் எத்தனையோ பேர் இருக்க, எப்பம் விடும் பார்ப்பனர் இலவசமாக அறுசுவையுண்டி யருந்த அன்ன சத்திரம் அமைத்தலே சாஸ்திரங்களில் சிறந்து கூறப்பெற்ற தருமமென்று சொல்லி நாட்டுக்கோட்டை செட்டிமாரை ஏய்த்துப் போஜனசாலைகள் ஏற்படுத்திக்கொண்டு, பார்ப்பனர் முறைபோட்டுக்கொண்டு உண்டுவரும் கொள்ளை. நாட்டுக்கு விடுதலை பெற்றுத் தரப்போவதாகக் கூறி, பார்ப்பனர், தங்கள் ஆதிக்கத்திற்கு அழிவு வாராமலும், மற்றவர்கள் தங்கள் ஆட்சிக்கு மீறி உயர்ந்துவிடாமலும் இருப்பதற்கு வேண்டியவாறு கட்சிகளை நடத்தும் முறை. "வெளுத்ததெல்லாம் பால் கறுத்ததெல்லாம் காகம்" என்று எண்ணவல்ல பார்ப்பனர் அல்லாத நல்லர் சிலரைக் கையின்கீழ் வைத்துக்கொண்டு எதற்கும் அவர்களை முன்னே தள்ளி உள்ளிருந்து ஆட்டிவைத்துத் தங்கள் கருத்தை முடித்துக் கொள்ளும் பார்ப்பனர் தந்திரம். உயர்தனிச் செம்மை வாய்ந்த தமிழ்மொழி வளர்ப்பார் அற்றுக்கிடக்க, தங்கள் ஆதிக்கத்திற்கு வலிவு செய்யக்கூடிய சமஸ்கிருத பாடசாலைகள் ஊருக்கொன்றாக அமைத்துக்கொள்ளுதற்பொருட்டு கேட்டதற்கெல்லாம் கொடுக்கவல்ல நாட்டுக்கோட்டைச் செட்டிமார்களது தலையைத் தடவும் யுக்தி.

களம் 12. பார்ப்பனர் அல்லாதார் கட்சி உத்தியோக வேட்டைக்கு உழைக்கின்றது என்று பொது மக்களிடம் இழித்துக் கூறி, பார்ப்பனர் தங்கள் பிள்ளைகளுக்கு இரகசிய

மாகப் பெருத்த உத்தியோகங்களையெல்லாம் கொள்ளை கொள்ளும் விதம். பார்ப்பனர் அல்லாதாரது உதவியினுலேயே படித்து உயர்ந்த உத்தியோகங்களுக்கு வந்த பார்ப்பனருங்கூட அவர் கீழுள்ள வேலைகளையெல்லாம் பார்ப்பனருக்கே கொடுக்க முயலும் வழக்கம். பார்ப்பனப் பெண்களும், இம்முயற்சியில் ஆண்களுக்குமுன் முனைந்து நிற்கும் விந்தை.

III
நூற்பயன்.

நாடகமாக நடித்துக் காட்டவேண்டுமென்னும் கருத்துக்கொண்டே இந்நூல் வரையப்பெற்றது. இதை நாடக மேடையிலோ, ஏட்டிலோ, அன்றிப் பிறர் நாவிலோ அறிய விரும்பும் நண்பர்கள்

பார்ப்பனராயின்

தாங்கள் இறைவன் முகத்திலிருந்து தோன்றியவர்களென்றும், எல்லா மக்களிலும் சிறந்தவர்கள் என்றும், பூலோக தேவர்களென்றும் தவருக இன்னமும் இறுமாந்து நினைந்துகொண்டு, இந்நூலில் விளக்கியுள்ள பார்ப்பனியத்திற்கு இனியானும் இடந்தாாமல் நடந்துகொள்ளுதலும்,

மற்ருராயின்,

தாங்கள் பார்ப்பனருக்கு அறிவிலும், ஒழுக்கத்திலும், பிறவற்றிலும் இயற்கையிலேயே தாழ்ந்தவர்களென்று

ஏமாந்து எண்ணிக்கொண்டு, அவர்களுக்கு எல்லாத் துறையிலும் அடிமைகளாக இருக்க இணங்காது, இனியானும் தங்கள் உரிமையையுணர்ந்து சுயமரியாதை நினைவு பெறுதலும்,

பார்ப்பனரும் அல்லாதாரும்,

தம்முள் ஒருசிறிதும் வேறுபாடின்றிக் கலந்து அளவளாவி, முன்னேற்றமுற ஒத்து உழைத்து வருதலும் இந்நூலாற்போந்த பெரும்பயனாகும்.

"ஒன்று பட்டாலுண்டு வாழ்வே—நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே
நன்றிது தேர்ந்திடல் வேண்டும்—இந்த
ஞானம் வந்தால்பின் நமக்கெது வேண்டும்
ஒன்று பட்டாலுண்டு வாழ்வே."

[பாரதியார் சுதேச கீதம்.]

அய்யங்கார்குளம்
15—4—30.

இலக்ஷ்மணனார்.

உள்ளுறை.

களம்.		பக்கம்.
1.	இடிச்சிண்டுன்னு போரா.	1
2.	இதோ! ஏதோ அமட்டப்பயெ வர்ரது. ...	3
3.	எவன் கெலிச்சா இன்னு எவன் தோத்தா இன்னு?	13
4.	கணபதி சாஸ்திரி நல்லவழி டண்ணி இருக்கார்! ...	19
5.	செட்டித் தலையைத் தடவி 1000, 2000 புடுங்கப் பார்க்கிருரு.	28
6.	வர்ர சூத்ராளே விரட்டி அடிச்சிண்டுதான் இருக்கேன்.	32
7.	தொட்டுண்டுவந்து சேரப்போரெ கர்மம்! கர்மம். ...	35
8.	ரயில்லெ அப்படி இல்லெ மாமி.	42
9.	அவா அவா கிளாஸ் பசங்களே அவா அவா நன்னு நசுக்கணம்.	50
10.	இந்தச் சூத்திரப் பயலுக்கு என்ன தைரியமின்றது!	55
11.	குலாம்காதர் சாயபு குழந்தையப்ப முதலியார். ...	57
12.	எங்கே இந்தப் பாலையன் ஆப்காரி குமாஸ்தா? ...	58

முற்றிற்று.

சுதந்திரப்பள்ளு.

ஆடுவோமே—பள்ளுப் பாடுவோமே
ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட்டோமென்று
(ஆடுவோ)

பார்ப்பானை 'ஐயர்' என்ற காலமும் போச்சே — வெள்ளைப்
பரங்கியைத் துரையென்ற காலமும் போச்சே — பிச்சை
ஏற்பாரைப் பணிகின்ற காலமும் போச்சே — நம்மை
ஏய்ப்போருக்கு ஏவல் செய்யும் காலமும் போச்சே (ஆடுவோ)

எல்லோரும் ஒன்றென்னுங் காலம் வந்ததே — பொய்யும்
ஏமாற்றும் தொலைகின்ற காலம் வந்ததே. — இனி
நல்லோர் பெரியர் என்னும் காலம் வந்ததே — கெட்ட
நயவஞ்சக்காரருக்கு நாசம் வந்ததே, (ஆடுவோ)

[பாரதியார் சுதேச கீதம்]

மதிப்புரை.

ஐயங்கார்குளம் திருவாளர் சோ. இலட்சுமணனால் எழுதப்பெற்ற "பங்கஜம் அல்லது பார்ப்பனக் கொடுமை" என்னும் இச்சிறு நாடக நூல் கற்பதற்கு இன்பந் தருவதாகவும், கருத்துக்கள் செறிந்துவருவதாகவும், விளங்குகின்றது. சுயமரியாதைக் கழக வெளியீடுகளுக்கு ஓர் அணிகலனைக் கொள்ளத்தக்க சிறப்பு வாய்ந்திருக்கின்றது.

பார்ப்பனச் சகோதரர்கள், மற்றூரைப் படுத்தும் பாடுகளில் எல்லாவற்றையும், நடப்பது நடப்பதுபோலேயே தெள்ளத் தெளிய எடுத்துக் காட்டும் பெருமையுடையது இந்நூல். சுயமரியாதை யுணர்ச்சியின்மையால், மற்றுரெல்லாம் பார்ப்பனர்கட்கு, எல்லாத் துறைகளிலும் எவ்வாறு அடிமைகளாக்கப்பெற்றிருக்கின்றனரென்பதும், இவ்வடிமைத்தனத்தினின்றும், நீங்கிக்கொள்ளாதவண்ணம், சாத்திரங்களையும், சூத்திரங்களையும் வெகு தந்திரமாக முற்காலத்திலேயே செய்துவைத்துவிட்டிருப்பதுமல்லாமல், இக்காலத்தும் எவ்வாறு சூழ்ச்சி செய்து தாழ்மைப்படுத்தி வருகின்றூர்களென்பதும், விளக்கமாகக் காட்டப்பெற்றிருக்கின்றன.

நமது சமூகம் சீர்ப்பெற வேண்டுமானல், பார்ப்பனர்கள் உள்பட எல்லோரும் இந்நூலைப் படிப்பதும், அதன் பயனாக இந்நூலில் எடுத்துக்காட்டப்பெற்றிருக்கும், கொடுமைகளை ஒழிக்க ஒத்து உழைப்பதும், மிகவும் அவசியமாகும். மாணவர்களும், பொழுது போக்குக்காக நாடகம் பயில்வோரும், நாடகமேடையிலாடுவதே தொழிலாக உடையோரும், இந்நாடகத்தை நடிக்க முன்வருவார்களாயின், நமது சமூகத்திற்குச் சேவை செய்வதுமல்லாமல் நமது நாட்டுக்கே பெரும் தொண்டு புரிபவர்களாவார்கள்.

"திராவிடன்" பத்திராலயம், சென்னை.

ஜனக சங்கர கண்ணப்பர்.

"திராவிடன்" ஆசிரியர்.

பாரத ஜனங்களின் தற்கால நிலைமை

(க) "நெஞ்சு பொறுக்குதிலையே—இந்த
நிலைகெட்ட மனிதரை நினைந்துவிட்டால்.
அஞ்சி அஞ்சிச் சாவார்—இவர்
அஞ்சாத பொருளில்லை அவனியிலே
வஞ்சனை பேய்கள் என்பார்—இந்த
மரத்தில்என்பார் அந்தக் குளத்தில்என்பார்
துஞ்சுவது முகட்டில் என்பார்—மிகத்
துயர்ப்படுவார் எண்ணிப் பயப்படுவார்"
(நெஞ்சு)

(உ) "மந்திர வாதி யென்பார்—சொன்ன
மாத்திரத்திலே மனக்கிலி பிடிப்பார்
யந்திர சூனி யங்கள்—இன்னும்
எத்தனை யாயிரம் இவர் துயர்கள்!
தந்த பொருளைக் கொண்டே—ஜனந்
தாங்குவர் உலகத்தில் அரசரெல்லாம்
அந்த அரசியலை—இவர்
அஞ்சுதரு பேயென்றெண்ணி நெஞ்சம்
[அயர்வார்" (நெஞ்சு)

சுப்பிரமணிய பாரதியார்

பங்கஜம்

அல்லது

பார்ப்பனக் கொடுமை.

களம் 1.

பாத்திரங்கள்:-

பங்கஜம்—பத்மகிரீச ஐயர் மகள்.

லக்ஷ்மி—வேலைக்காரி.

சீதம்மா—பங்கஜத்தின் பாட்டி.

பத்மகிரீச ஐயர்—பஞ்சாங்க பார்ப்பனர்.

காலம்—காலை 6 மணி.

இடம்—அக்கிராரத்தில் ஒரு வீடு.

பங்கஜம்:—டீ! டீ! சூத்திரச்சி எங்நோத்துக்குடி வர்ரது; நோக்கென்ன கண்ணிலே கொழுப்பாடி மேயாது; நன்னாஆ தின்ராளே பண்ணியாட்டமா!

(லக்ஷ்மி கையில் இரண்டு பாத்திரம் எடுத்துக்கொண்டு ஒதுங்கி வருகிறாள்)

இந்த சூத்திரச்சிக்கு என்ன கண்ணைக்கூட தெரிய மாட்டேன்ரதே; இடிச்சிண்டுன்னாபோரா.

(என்று சொல்லிக்கொண்டே சென்று, குனிந்து சாமான் தேய்த்துக்கொண்டிருந்த லக்ஷ்மியைத் தாடையின்மீது இடிக்கிறாள்.

லக்ஷ்மி:—உம்; ஏம்மா இப்படி இடிக்கிரே; நாமெங்கே உன்னெ தொட்டுகினேன்; ஓரமாத்தானே அம்மா வந்தேன்.

சீதம்மா:—டீ! டீ! லக்ஷ்மி நோக்கென்ன வாய் இப்படி அதிகமாப்போச்சே; சூத்திராளுக்கு நாசமாபோரத்துக்குத்தான் காலம் வந்தூட்டது. கலிகாலமன்னோ இது; பிராம்மணா இன்னு கொஞ்சமும் அச்சத்தைக் காணுமே; கொழந்தை மேலே விழுந்துண்டுபோரது மல்லாமே ரொம்ப பேஸ்ராளே கேக்கப்போணுக்கே.

லக்ஷ்மி:—இன்னுத்தம்மா சொல்லிட்டேன் நானு; அந்தக்கொழந்தை எப்படி இடிச்சுது பாருங்களேன் கொடிசிமேலே! ஜிவ்ஜிவ்வின்னு நோவுதேமா இன்னும்.

சீதம்மா:—வெரும்மனே பேசாதேடீ; சூத்திராளுக்கே இப்போ கண்ணேமண்ணே தெரியல்லே; டீ பங்கஜம் நீ இப்படிவா, உங்கப்பா வந்தா அவளை என்னவோணு பண்ணிக்கட்டும்; நமக்கெல்லாம் அவெொ வழிக்கு வர்ரவோ அன்னு. (பத்மகிரீச ஐயர் வருகிறார்.)

பத்மகிரீச ஐயர்:—என்னடீ அது! டீலக்ஷ்மி! என்னசேய்சுடே!

பங்கஜமும் பாட்டியும்:—என்ன சேய்சுடா, மத்தியான மானெப்பாற வந்தா; ஏண்டீண்ணு கேட்டாக்கே மேலே இடிச்சுண்டு போரா.

பத்ம:—லக்ஷ்மி நோக்கென்ன இவ்வளவு அகம்பாவம் பிராம்ணு இன்னு மரியாதையே இல்லாமே அன்னே போயிட்டுது; உலகத்துக்கே விநாசகாலந்தான் இனிமேல்.

லக்ஷ்மி:—நான் இன்னைக்கே பண்ணிட்டேன் சாமி! அந்த பகவான்தான் அறிவார்; காகாண்ணு எழுந்துவா சூரிய பகவான்.

பத்ம:—டீ! போதும் வாயைமூட்ரீ; சீக்கிரமா வேலையாகட்டும். காலம் கலிகாலமாபோச்சு! ஸ்ரீராமா; ராமா! (உள்ளே போகிறார்)

பங்கஜம்:—டீ, லக்ஷ்மி! நான் கலியாணம் பண்ணிண்டு போகட்டும்;வாடி சொல்றேன்; உன்னை கசக்கிப் பிழிஞ்சிடுவண்டி; எங்கப்பாருக்குத் தெரியல்லே; சாது, பாவம்! வெறும்மனே உட்டுட்டாரு.

(முதற்களம் முற்றிற்று.)

களம் 2.

பாத்திரங்கள்;-

பத்மகிரீச ஐயர்
பங்கஜம்
நடேசன்—கிராம அம்பட்டன்.

கோவிந்தராஜலு நாயுடு முருகேச முதலியார் பத்மநாப ரெட்டியார் ரங்கசாமிக் கோனார் முனிசாமி கவுண்டர் குருசாமி நாய்க்கர் ராமநாதப் பிள்ளை	கிராமஸ்தர்கள்.

ராமசாமி சாஸ்திரி—கிராம மற்ெருரு பிராமணர்

காலம்—காலே 8-மணி

இடம்—பத்மகிரீச ஐயர் வீட்டுத் திண்ணை

பத்மகிரீச அய்யர்:—(திண்ணைமீது உட்கார்ந்து வயிற்றைத் தடவி ஏப்பமிட்டுக்கொண்டு தனக்குத்தானே பேசிக் கொண்டு இருக்கிறார்).

என்ன இந்த சூத்திரப் பயல்கள் ஒருத்தறையும் காணேம்; குழந்தை பங்கஜத்திற்கு வயதாயிட்டது கலியாணத் தைப் பண்ணிபோடணும். ஊரிலே பரபாணு ஏழெட்டு காமாந்திரம் கல்லெடுப்புண்ணு வந்தாத்தானே சா மான் சேரும். ரெண்டு நாளா வெரம்மே இருக்கிறதா இருக்கே. இதோ ஏதோ அமட்டப் பயெ வர்ரது (முக மலர்ச்சியுடன் உறக்க) அடீ பங்கஜம்! அந்த பஞ்சாங் கக் கட்டை எடுத்துண்டு வாடி.

நடேசன்:—சாமி! (என்று தாழ்ந்து கும்பிடல்)

பத்ம:—என்னடா அது? (பங்கஜம் பஞ்சாங்கக் கட்டை வைத்துவிட்டு வேடிக்கை பார்த்துகொண்டிருக்கிறுள்.)

நடேசன்;—சாமி! நம்ப பொண் கொயந்தை பெரிசாச் சிங்கோ; நல்லது கெட்டது பார்த்து சொல்லணுங்கோ.

பத்ம:—எண்ணைக்கு வீட்டுக்கு அழச்சிக்கிறிங்கடா?

நடேசன்:—சாமிதான் நாள்பார்க்கணும்; நல்லதும் கெட்ட தும் பார்த்து சொல்லணும்.

பத்ம:—சரி முதல்லெ நாள் பார்த்துக்கோ: அது இருக்கட் டும்; ஏண்டா கம்மினுட்டீ (கோபத்துடன்) காலமெ எழுந்ததும் வெரும்மையாடா நாள் பார்ப்பாங்கோ; போடா முண்டம் போ.

நடேசன்:—சாமி ஏழை! இதோ கொண்ணுந்துகிரேன் வெற்றிலைப் பாக்கு; (என்று மடியில் இருந்து எடுத்து பயந்துகொண்டுபோய் ஐயரருகே வைக்கிறான்.)

பத்ம:—வெற்றிலைப்பாக்கா; தக்ஷிணை எங்கேடா?

நடேசன்:—ஈது சாமி; அதிலேதான்.

பத்ம:—(அவசரமாக வெற்றிலைப் பாக்கை எடுத்துப் பார்க்கிறார்; இரண்டணா இருக்க, எடுத்துக் கோபத்துடன்) எண்டா கம்மினாட்டீ இந்த ரெண்டணாவுக்காடா நாள் வைச்சிக் கொடுப்பாங்கொ; (என்று விசிறி அடிக்கிறார்) போடா போய் பழங்களத்தில் வைச்சிண்டிருக்கிரத்தே எடுத்தாப்போ. ஐயருக்கு ஒரு ரூபாயாவது தக்ஷிணை வைக்கப்படாதா போடா போ.

நடேசன்:—சாமி, ஏழைப்பட்டவன்; அண்ணூடம் கஞ்சி அரை வயிறுகூட கிடைக்கிலிங்களேசாமி பயங்களத்திலே என்ன வைச்சிங்கிரேன்.

(கோவிந்தராஜலு நாயுடுவும் முருகேச முதலியாரும் வருகிறார்கள்.)

பத்ம:—இந்தா; தொலே! அந்த ரெண்டணாவைக்கொண்டு இங்கே வைச்சுட்டு மேலே ஏதாவது கிடைக்கிறதைக் கொண்டா. ஓடு; இங்கே நிண்ணுண்டு தொந்திரவு செய்யாதே.

(நாயுடு முதலியாரைப் பார்த்து) வரணும்.

நாயுடும் முதலியாரும்:—சுவாமி! நமஸ்காரம்.

பத்ம:—என்ன விசேஷம்; உட்காருங்கோ.

நாயுடுவும் முதலியாரும்:—தங்களண்டேதான் வந்தோம்.

முதலியார்:—நம்ம நாயுடு மகளுக்குச் சாந்திமுகூர்த்தம் செய்யணும் என்று இருக்கிறார்.

பத்ம:—அப்படியா; சந்தோஷம்!

நாயுடு:—நம்ம முதலியாருக்குப் பேரன் பிறக்கப்போகிறான்

பத்ம:—ஆ, ஆ! ரொம்ப சந்தோஷம். சீமந்தத்திற்கு நமக்கு ஒரு பட்டுப் பன்னெண்டாருக்குக் குறைவில்லே. இதோ பார்த்துச் சொல்லிவிட்டேன் நாளே, (பஞ்சாங்கம் புரட்டுகின்றார்.) கோவிந்தாராஜலு நாயுடு! நம்ம குழந்தை நக்ஷத்திரமென்ன?

நாயுடு:—சுவாதி.

பத்ம:—மாப்பிள்ளேது?

நாயுடு—உத்திராடம்.

பத்ம:—சரி; பேஷ்! நாளே வெள்ளிக்கிழமை ராத்திரி (10-30) மணிக்கு நன்னு இருக்கு; வேண்டிய சாமான் களே எல்லாம்சேர்த்துவிட்டீரோ அன்னே;நமக்கென்ன ஒரு சவரனும் ஒரு ஜதை வேஷ்டியும் கொடுப்பது வழக்கம்; உங்கள் பாட்டனார் காலத்தில் இருந்து அப் படியேதான்.

நாயுடு:—அதற்கென்ன சாமி; ஐயர் அவாள் ஆசீர்வாதத் தினுலே இப்பவும் அப்படியே நடந்துபோகிறது.

பத்ம:—பகவான் இருக்கான்; சரி! முருகேச முதலியாரே! இது எத்தனை மாசமாகிறது?

முதலியார்:—ஏழாகிறது சாமி.

பத்ம:—அப்படியா? நாளே சனிக்கிழமையே வைத்துக் கொள்ளலாம் சீமந்தம். நல்ல பேரன் பிறப்பான். மன

சுக்குத் திருப்தியாய் நம்மைக் கவனிக்கணம். நான் கேழ்க்கவேண்டியதில்லே; உங்கள் சீமந்தத்திற்கு உங்க தகப்பனர் ஒரு வண்டி சிறுமணி நெல்லும் தக்ஷணை 15 ரூபாயோ என்னமோ கொடுத்ததாக ஞாபகம். நம்ம பங்கஜத்தையும் அழச்சிண்டு வாரேன்; வெரும்மெ பெங்களூர் வளையல் வேண்டும்; செயின்வேண்டுமின்னு அழுதுண்டு இருக்கா; நீங்களும் நாயுடுவும் சேர்ந்து ஏதாவது அவளுக்கு செய்யுங்களேன்.

முதலியார்:—அப்படியே சாமி; இன்னும் சிறப்பாகவே நடக்குது, போங்களேன். இப்போது தங்கள் ஆசீர்வாதத்திலேதான் நாங்கள் இவ்வளவு சுகமாக இருப்பது. அப்போ உத்திரவுகொடுக்கிறீர்களா? (என்று எழுந்திருக்கிருர். நாயுடும் உடன் எழுந்திருக்க, கும்பிடுகிருர்கள்.)

பத்ம:—செய்யுங்கோ; வெள்ளிக்கிழமை ராத்திரி நாயுடு வீட்டில் விருந்து! மறுநாள் காலமே முதலியார் வீட்டில் விருந்து! இது ஒரு விசேஷந்தான். வழக்கம்போல விசேஷமா செய்விங்களோ அன்னே?

முதலியாரும் நாயுடுவும்:—ஏதோ நடக்கும் தங்கள் ஆசீர்வாதத்திலே.

பத்ம:—ஆமாம், ஒண்ணு சொல்லனுண்ணு இருந்தேன். பந்தியிலே கழுதை குதிரை எல்லாரையும் ஒண்ணு வச்சா பரிமாருவிங்கோ? இந்தக் காலத்திலே அது ஒரு பீடை வழக்கமா பூட்டாபோலிருக்கே, என்ன அநியாயமாயிருக்கு! சூத்திராள்ளே நாயுடு, முதலியார் இன்னுஞ்சிறந்தவர்களாச்சு; இவாளோடே கோனர், படையாக்ஷி, ஆசாரி, பூசாரி, எல்லாரையும் ஒரே பந்தியிலா உட்காரவச்சுடரது.

முதலியார்:—ஆமாம் சாமி; இந்த காலத்திலே ஜாதி வித்தியாசம் என்னத்திற்கு கவனிக்கிறது என்கிறார்களே, அது நல்லது தானு?

பத்ம:—கிருஷ்ண! கிருஷ்ண! பெரும் பாவமல்லவா அப்படி செய்வது! தரித்திரம் பிடிங்கித் தின்னுமே. கடவுளே பல ஜாதிகளை சிருஷ்டித்திருக்கும்போது நாம் அவர் கருத்துக்கு விரோதமாகப் போகலாமா? "சாதுர் வர்ணியம் மயா சிருஷ்டம்" என்கிறார் பகவான் கீதையிலே.

நாயுடு:—சரிதான் சாமி; தாங்கள் சொல்ரது நல்லத்துக்குத் தானே; அந்தந்த ஜாதிக்குத் தனித்தனியாய் இடம் ஏற்பாடு பண்ணிவிடுகிறோம். சாஸ்திரப் பிரகாரமே நடந்துவிடுவோமே.

பத்ம:—அதுதான் தருமம். உங்களவாளெல்லாம் சாப்பிட்ட பிறகு மற்றவாளுக்குப் போட்ரது இன்னும் நல்லது. ஜாதிக்குத் தகுந்த மரியாதை கொடுக்கணுமோ அன்னோ. சரி போய்விட்டு வாருங்கோ, மணியாரது; இதோ பத்மநாப ரெட்டியார் வருகிறார்.

நாயுடுவும் முதலியாரும்:—உத்திரவு சாமி. (கும்பிட்டுக் கொண்டு)

பத்ம:—செய்யுங்கோ. வாங்கோ ரெட்டியாரே! எங்கே சேனுளாச்சே பாத்து. நீங்களும் என்ன அந்த எம். கெ. ரெட்டியாரைப் பாத்துண்டு என்னமோ சுயமரியாதை இயக்கமாமே பிராம்மணு கூடாதென்ற இயக்கம், அதெலெ சேர்ந்துட்டீரோ என்னமோ இன்னு நினைச்சிண்டிருக்கேன். என்ன விசேஷம்? உட்காருங்கோ.

ரெட்டியார்:—அதெல்லாம் ஒன்றுமில்லேங்கோ சாமி. வீட்டிலே கொஞ்சம் வேலே.

பத்ம:—என்ன விசேஷம்? ஆருவது பிள்ளே பிறந்திருக்கிருஞ?

ரெட்டியார்:—ஆமாம் சாமி; தங்களுடைய ஆசீர்வாதம்.

பத்ம:—சரி இதோ நாள் பாத்துட்ரேன். (பஞ்சாங்கம் பார்த்துக்கொண்டே) அடி பங்கஜம்! மாமாவுக்குப் பையன் பிறந்திருக்கிருஞம். உனக்கு என்ன கொடுக்கிருர் என்று கேளு. (பங்கஜம் சிரிக்கிருள்). ரெட்டியாரைப் பார்த்து என்றைக்குப் பிரசவம்?

ரெட்டியார்:—போன வியாழக்கிழமை சாமி.

பத்ம:—நல்லது.

(கோனரும் கவுண்டரும் வருகிருர்கள்)

வாருங்கள் கோனரே கவுண்டரே வரணும். எங்கே இந்தப் பக்கம் வர்ரதே இல்லே. உட்காருங்கோ.

(ரெட்டியாரைப் பார்த்து) எத்தனே மணிக்கு?

ரெட்டியார்:—காலே 9 அடித்து 11 நிமிஷத்திற்கு

பத்ம:—ரொம்ப நன்ன இருக்கு ஜாதகம். ஆரும் பிறவுக்கு எற்ற ஜாதகம். கனகைய ரெட்டியாரின்னு பேர் வைச்சுடலாம். நாளே ஞாயிற்றுக்கிழமை புண்ணியாவசனமும் நாமகாணமும் வைச்சுக்கொள்ளலாம்.

நமக்கு என்ன செய்யப்போகிறீர்கள்? ஒரு ஜதை வேஷ்டிக்கும் மூன்று சவரனுக்கும் குறையக்கூடாது. ஆரும் பிறவு பேஷான ஜாதகம். ஜில்லா கலேக்டாராக வந்துடப் போரான் உங்க பையன்.

ரெட்டியார்:—(சந்தோஷத்துடன்) தங்கள் வாய் முகூர்த்தம் அப்படியே ஆகவேண்டும். தங்களுக்கென்ன குறை

செய்யப்போகிறோம். இஷ்டப்படியே நடத்திவிடுகிறேன்.

பத்ம:—சரி! போய்வர்றீளா? ஞாயிற்றுக்கிழமை காலமே வந்துட்ரேன். குழந்தை பங்கஜமும் வரா.

ரெட்டியார்:—(கும்பிட்டு) நல்லது உத்திரவு சாமி (என்று போகிறார்).

பத்ம:—என்ன கோனாரே! என்ன விசேஷம்?

கோனார்:—நம்ம பேத்திக்கு காது குத்தி மயிர் வாங்கணும்; நம்ம பேரனைப் பள்ளிக்கூடத்திலே போடவேண்டும்.

பத்ம:—அப்படியா, நல்லது.

கவுண்டரே! நம்ம பையனுக்கு என்ன, கலியாணத்திற்கு ஏற்பாடு செய்துட்டீரா?

கவுண்டர்:—அதற்குத்தான் சாமி நங்களண்டே வந்தேன்.

பத்ம:—சரி! முகூர்த்தம் வைச்சி குடுத்துட்ரேன்.

(குருசாமி நாய்க்கரும் இராமநாதப் பிள்ளையும் வருகிறார்கள்)

வாருங்கோ குருசாமி நாய்க்கரே! ராமநாதப் பிள்ளையே வாணும்! (நாய்க்கரைப் பார்த்து) காரியம் 16-ம் நாள்தான் வைச்சுக்கிணம். அதைப்பற்றிதானே வந்தீர்கள்? ஐயோ! ஏன் இவ்வளவு சிரமம்? புதன்கிழமை தினம்தான் 16-ம் நாள். சாயங்காலமா வந்தாக்கே பிராமணாளுக்குக் கொடுக்கவேண்டிய சாமான்கள் முதலியவற்றிற்கு லிஸ்டு போட்டு குடுத்துட்ரேன்.

(இராமநாதப் பிள்ளையைப் பார்த்து)

உங்கள் தாயார் திதி இன்றைக்குப் பத்தாம் நாள், அதாவது செவ்வாய்க்கிழமை வர்ரது. ஞாபகம் வைச்சிண்டுதான் இருக்கிறேன். அந்தப் பக்கம் வரலா

மென்ற எண்ணந்தான், வர்ரத்துக்கே ஓயல்லே போங்க ராமநாதப்பிள்ளே. வெய்யில் ஏறிவிட்டது எல்லோருமே மத்தியானமா வந்துட்டாக்கா நன்னாரிக்கும்.

நம்ம குழந்தைக்கு வயதாறது. கலியாணத்தைப் பண்ண ணும். பீ.ஏ.,(B.A.,) வாசிக்கிறான் ஒரு பையன். அவனே மனசிலே வச்சிண்டிருக்கிறேன். பணந்தான் அதிக மாய்ப் பிடிக்கும்போல் இருக்கு. நீங்கள் எல்லாம் தாரா ளமா உதவணும்.

எல்லோரும்:—அதற்கென்ன சாமி; தங்கள் ஆசீர்வாதத்தி னல் நாங்கள் இருக்கும்போது தங்களுக்கு இல்லாதது என்ன சாமி.

பத்ம:—நம்ம கோனர் அவளுக்குப் பட்டு வஸ்திராதிகளுக் காக இருநூறு ரூபாய் கொடுத்துடலாம். கவுண்டர் தன் மகன் கலியாணத்திலே நம்ம குழந்தைக்கு ஒரு தங்க ஒட்டியாணம் போட்டுள்ளாம்.

கோனரும் கவுண்டரும்:—தங்கள் ஆசீர்வாதம் அப்படியே நடத்திவிட்டால் போகிறது.

எல்லோரும்:—உத்திரவு சாமி (கும்பிடுகிறர்கள்).

பத்ம:—போய்வாருங்கோ.

(நடேசன் ஒரு பூசனிக்காயைத் தலேமேல் சுமந்து கொண்டு கையில் கீரைத் தண்டு கொண்டுவருகிறன்.)

நடேசன்:—சாமி! ஏழைப்பட்டவன்; பிழக்கடையில் இது தான் அகப்பட்டது சாமி வேரே துட்டே இல்லே. இனிமே கடனே கக்ஷியே வாங்கித்தான் குழந்தைக்கு நடத்தலாமென்றிருக்கிறேன். (ஐயர்முன் வைக்கிறன்)

பத்ம:—சரி, தொலே. நாழியாறது, வைச்சுட்டு போ. நாளே விடியற்காலம் வந்துவிடு; நாள் பார்த்து வைச்சிவைக் கிறேன்.

நடேசன்:—சாமி ஏழைப்பட்டவன்.

பத்ம:—சரிதான் போடா போ; நாளை சூரியோதயத்திற்கு வந்துவிடு.

நடேசன்:—சாமி! (விழுந்து கும்பிட்டுப் போகிறுன்)

(இராமசாமி சாஸ்திரியார் வருகிறுர்).

பத்ம:—ராமசாமி சாஸ்த்திரியாரே வாருங்கோ! இப்படியே வாருங்கோ. அங்கே சூத்திராள் உட்கார்ந்த இடம். அடீ பங்கஜம்! போய் பாட்டியண்டை சொல்லி இங்கே சாணம் தெளிக்கச் சொல்லடி. (பங்கஜம் ஓடுகிறுள்) (நின்றுகொண்டே பேசுகிறுர்கள்).

சாஸ்த்திரி:— என்ன, சூத்திரக் கூட்டம் விசேஷம்போல் இருக்கே இன்னைக்கி.

பத்ம:—ஆமான்ன அவாளை பிடிச்சிவச்சிண்டிருந்தாத்தானே நம்ம பிழைப்பு ஆரேனென்ரது. இன்னுங்கூட அவாளோடவேலை இருந்தது. திரு மானு பொனுவைப் பார்க்கப் போவணம். அதற்காகத்தான் இவ்வளவு சீக்கிரத்தில் முடிச்சிண்டேன்.

சாஸ்த்திரி:—செட்டியண்டை என்ன விசேஷம்?

பத்ம:—சொல்ரேன் பின்னுலே.

சாஸ்த்திரி:—உங்கள் மாமன் பிள்ளைதானே அந்தச் செட்டியண்டை குமாஸ்த்தா?

பத்ம:—ஆமாம்! நம்ம கயிலாசந்தான்.

சாஸ்த்திரி:—பின்னே என்ன கஷ்டம். (பங்கஜம் பாட்டியோடு வந்து நிற்கிறுள்) சரி! நான் போய் வரட்டுமா. செட்டியண்டை ஏதாவது அகப்படுவதாயிருந்தாக்கே நமக்கும் சொல்லும். (போகிறுர்.)

பத்ம;—சரி, பார்ப்போம்.

சீதம்மா:—(நாயுடு முதலியவர்கள் உட்கார்ந்த இடத்தில் சாணி தெளித்துக்கொண்டு) இதென்ன பூர்வ ஜென்ம கர்மமாயிருக்கு. இந்தச் சூத்திராளெ வாசல்லே நிற்க வைச்சிப் பேசித் தொலையக்கூடாதா இந்தப் பிராம ணன்? மெழுகி வைத்த திண்ணையின்மேலே நன்னு வந்து உட்கார்ந்திடுதுகோ இந்தச் சூத்திரப் பீடைகோ கலிகாலமா அன்னே போச்சு. கிருஷ்ணு! கிருஷ்ணு!

இரண்டாங்களம் முற்றிற்று.

களம் 3.

பாத்திரங்கள்;-

பத்மகிரீச ஐயர்

ருக்மணியம்மாள்—பத்மகிரீச ஐயர் உறவினர்.

கோபால்சாமி ஐயர்—வக்கீல் குமாஸ்தா.

இரு முதலியார்கள்—கட்சிக்காரர்கள்.

காலம்—மாலை 4மணி.

இடம்—அடுத்த ஊரில் ஓர் அக்ராரத்தில் வக்கீல் நாரா யண ஐயர் வீடு.

முதலியார்:—சாமி நமஸ்காரம்.

கோபால்சாமி ஐயர்:—யார்ரா அது?

முதலியார்:—சாமி! கேசு விஷயமாய் நேற்று வந்தனுங் களே. எங்க ஊரு பத்மகிரீச ஐயர்தான் தங்ககிட்டே போம்படிச் சொன்னுரு இன்னனுங்களே.

கோபா:—ஓ அப்படியா! வாய்யா முதலி. என்ன நேற்று ராத்திரியே பாத்தார் உங்கட்டே வக்கீல் அய்யர்.

அதிலே ஒன்னும் பிரயோஜனம் இல்லே இன்னு சொல் விட்டாரு.

முத்:—சாமி! அப்பரம் எப்படி?

கோபா:—எப்படி இன்னு? ரொம்ப கஷ்டப்பட்டால் ஏதாவது அனுகூலம் ஆகலாம். அவ்வளோ கஷ்டத்துக்கு உன்னால் பீசு குடுத்து முடியுமா?

முத்:—சாமி! பீசு இன்னு ஆனாலும் ஆவுது. எப்படியாவது கேசு கெலிச்சுட்டாப் போதுஞ் சாமி. ஏதோ சாமி கொடுத்தது நாலு ஏகரா பூமி இருக்குது.

கோபா:—சரி! நாளொன்னுக்கு 250 ரூபாயாவது ஆவும். வக்கீல் இன்னும் அதிகமாகவே சொன்னார். நான் தான் நடுவுலே இருந்து ஏழைப்பட்டவன் பாவம் இன்னு சொல்லி 250-க்கு ஒத்துக்கொ சொன்னேன். இன்னும் அவர் ஒத்துக்கலே. ரொம்ப கஷ்டமிருக்குது இன்னு சொல்ராரு.

முத்:—சாமி! எப்படியாவது நீங்கதான் ஏற்பாடு செய்து வைக்கணும்.

கோபா:—என்ன செய்தா நமக்கு இன்னு? கேசு கெலிச்சா சொல்லாமெ போயிடப்போரெ.

முத்:—சாமி! அப்படி எண்ணிடாதிங்கோ, உங்களுக்கு இன்னு கட்டளேயோ அத்தெ குடுத்துட்ரேன் சாமி.

கோபா:—நமக்கு இப்போ ஒரு அம்பது ரூபாயாவது குடுத்துட்ணம். கேசு முடிஞ்சா, பின்னாலே உனக்கு இஷ்டமானத்தெ கொடுக்கலாம்.

முத்:—சரி அப்படியே சாமி.

ஆமாம் எதிர் கட்சியிலே எங்கொ அண்ணன் திருவேங்கடாசாரியெ வைச்சிருக்கான். அந்த வக்கீலேப் பார்க்கிலும் நம்ம வக்கீல் கெட்டிக்காரர். இல்லேயா?

கோபா:—ஆட்சேபனை என்ன இருக்கு. வேணுமானுக்கே நான் அந்த வக்கீலோடே பேசரேன். மொத்தத்திலே ஒரு ஐநூறு ரூபாய் குடுத்தூட்டாக்கே நமக்கு சாதக மாவே பேசிட்டுப் பூடுவாரு.

முத:—(சிரிப்புடன்) அப்படிங்களா? அப்போ நமக்கு நிச்ச யமா கெலிப்புதான். அப்படியே ஏற்பாடு செய்யுங் களேன் சாமி. ஐந்நூறு இல்லே ஆயிரம் ஆனாலும் சரி, கேசு கெலிச்சுப்பூட வேண்டியதுதானே நமக்கு.

கோபா:—சரி. அப்போ நீ நாளை காலமே வந்துடு. எல்லாம் பேசி நான் ஏற்பாடு செய்து வைக்கிறேன்.

முத:—சாமி! நீங்கள்தான் காப்பாத்தணும் (கும்பிட்டுச் செல்கிறார்).

(பத்மகிரீச ஐயர் வேகமாக வருகிறார்)

கோபா:—வாங்கொ பத்மகிரீச அய்யர் அவாள்! நல்ல கேசு ஒன்னு பிடிச்சு அனுப்பிச்சிருந்தீளே.

பத்ம:—ஆமான்னா, அண்ணன் தம்பி இரண்டு முதலிப் பய லுகொ. கொழுத்துப்போய் ஒண்ணோடே ஒண்ணு சண்டைப் போடுதுகொ. நன்னா உரிஞ்சிடுங்கொ சொல் ரேன்.

கோபா:—இந்தப் பயல் அண்ணனுக்கு சொத்து என்ன இருக்கும்?

பத்ம:—எல்லாம் இருக்கு எழெட்டு ஏக்ராவுக்கு.

கோபா:—சரி! அவனையும் பிடிச்சு ஏதாவது பிடுங்கணும். நீங்கொ பாத்தாக்கே சொல்லுங்கொ. திருவேங்கடா சாரியெ வைச்சிருக்கானும். எதிர் கை வக்கீலுக்குப் பணங்கொடுத்தா எதிர் கட்சி பலங் குறைஞ்சி போகும்

இன்னு அவனிடம் சொல்லுங்கொ. அவங்கிட்டு இருந்தும் நமக்கு ஏதாவது வரட்டுமே.

பத்ம:—எவன் கெலிச்சா இன்னு; எவன் தோத்தா இன்னு? நமக்குப் பணம் வரவேண்டியது. சூத்ரா பணத்தை பிராம்மணுத்தானே அனுபவிக்கணும்.

கோபா:—சரி, பீசு வாங்கினதும் உம்ம கமிஷனை அனுப்பிச்சுட்ரோம். அதுக்குத்தானு இப்போ வந்தீர்; ரொம்ப கேசு அனுப்பரத்தெ காணுமே இப்போல்லாம்.

பத்ம:—உம்! என் கமிஷனுக்கு இன்னு இப்போ அவசரம் மெள்ள அனுப்புங்கோ; பீசு மாத்திரம் பலமா வாங்கிடணம். எங்கெ, இந்தச் சூத்திரப் பயல்களெ வழிக்குக் கொண்டாரது இன்னு லேசா இருக்கா இன்னு இந்தக் காலத்திலே. பார்ப்பான் பார்ப்பான் இன்னு வைய ஆரம்பிச்சுட்ரதுகளே.

கோபா:—சரி, அப்போ எங்கே இவ்வளோ அவசரமா வந்தீர்?

பத்ம:—ஒன்னும் இல்லே. ருக்மணி அம்மா இருக்காளோ அன்னே?

கோபா:—ஓ! கலியாண விஷயமா? பேசுங்கொ, இருக்கா ருக்மணியம்மா.

அம்மா! (உரக்கக் கூப்பிடுகிறுன்)

ருக்மணி:—(உள்ளிருந்து) இதோ வந்துட்டேன்.

கோபா:—சரி! நான் அப்போ போயிட்டு வர்ரேன்.

பத்ம:—செய்யுங்கொ.

(ருக்மணி அம்மாள் வருகிறுர்கள்)

ருக்மணி:—வாருங்கோ! எங்கே இந்தப் பக்கம்?

பத்ம:—வெருமதான் வந்தேன்;பார்த்து ரொம்பநாளாச்சே.

ருக்மணி:—பங்கஜம் எப்படி இருக்கா?

பத்ம:—அவளைப் பற்றிதான் பெரிய கவலையாப்போச்சே இப்போ.

ருக்மணி:—என்ன, ஆபத்தாரண ஐயர் தன் மகனுக்குக் கொள்ள சம்மதப்பட்டுத்தானே இருக்கார்?

பத்ம:—ஆமாம்; அவர் இதைப்பற்றி ஏதாவது எழுதினரோ உங்களுக்கு?

ருக்மணி—எழுதி இருந்தார்; வரதக்ஷிணை இரண்டாயிரம் கொடுக்கிறதற்கு ஒன்றும் ஆக்ஷேபனை இல்லையே?

பத்ம:—என்ன ஆக்ஷேபனை இருக்கு.

ருக்மணி:—ராஜகோபாலன் பி. ஏ., (B. A,) ரிசல்ட் இன்னும் வரவில்லை. பஸ்டு கிளாசிலேயே பாஸ் செய்துவிடுவான். கெட்டிக்காரப்பயல், பாஸ் பண்ணதும் ஐ. ஸி. எஸ். (I. C. S.) பரிக்ஷைக்குச் சீமைக்குப்போகணும் என்னு இருக்கான்.

பத்ம:—சீமைக்கா; அப்போ கலியாணம் எப்போ வச்சிக்கிறது?

ருக்மணி:—கலியாணத்தை வர்ர சித்திரை மாசத்திலேயே செய்துவிட்டாக்கே பின்னாலே அவன் புறப்பட்டுப் போரத்துக்கு சௌகரியமாய் இருக்கும். என்ன யோசிக்கிறீர்? சீமைக்குப்போய் வந்தாக்கே ஜாதி பிரஷ்டமாய் போமென்னு பார்க்கிறீரா?

பத்ம:—உம், உம், அதற்கென்ன, பிராயச்சித்தம் செய்துட்டாக்கே போரது; அதைப்பற்றி ஒன்றுமில்லை.

ருக்மணி:—பின்னே என்ன சீமைக்குப் போரத்துக்கு; பணம் ஒம்மைக் கேப்பானிண்ணு பார்க்கிறீரா? எனக்கு எழுதினத்திலே 2500 ரூபாயாவது குறைந்தது பிடிக்கும் இன்னும்; அத்தே பெண் வீட்டாரே கொடுத்து விடும்படி ஏற்பாடு செய்யணுமின்னுந்தான் எழுதி யிருந்தார். என்ன சும்மா இருக்கிறீரே.

பத்ம:—ஒன்றுமில்லை; என்ன, அவா ஒன்னும் ஏழையில்லையே?

ருக்மணி:—ஏழை, பணக்காரா; இத்தைப்பத்தியா கேள்வி இப்போ; பையன் படிப்புக்கு இன்னு யாசகம் செய்து சேர்த்ததிலேயே இப்போ 3000 சொச்சம் ரூபாய் ரொக்கம் வைச்சிண்டு இருக்கார். மற்றப்படியும் அவாளுக்கென்ன, தானமாய் வந்ததே எழெட்டுக் காணி நிலத்துக்கிருக்கு. இருந்தாலும் உங்கள் மாப்பிள்ளைக்கு நீங்கள் செய்யவேண்டியதெல்லாம் செய்யணுமோ அன்னோ?

பத்ம:—கூடுமானல் எவ்வளவு வேண்டுமானுக்கே செய்யலாம்; முடியணுமே.

ருக்மணி:—முடிந்துதானே ஆகணும்; கலெக்டர் மாப்பிள்ளை இன்னு லேசா.

பத்ம:—பார்ப்போம்; செட்டி ஒர்த்தன்தான் இருக்கிறன். அவனண்டே எங்கள் மாமன் பிள்ளைதான் குமாஸ்தா; அந்த மார்க்கத்தில் முயற்சி பண்ணி ஏற்பாடு செய்வேன். இப்போவும் அதற்குத்தான் போனேன்.

அவளை ஆத்திலே காணும்; நாளைக்காவது போய் பார்க்கணும். அப்போ நான் வரட்டுமா?

ருக்மணி:—எங்கே, இருந்து சாப்பிட்டுப்போகலாம்; நீங்கள்தான் அவசரப் பட்றீளே, செய்யுங்கோ.

பத்ம:—வர்ரேன், நீங்கள்தான் அவாளுக்குச் சொல்வதைச் சொல்லி முடிச்சி வைக்கணும். வேறே எங்கானும் பாக்ராளா இன்னு?

ருக்மணி:—எல்லாம் உங்களுக்குத்தான் முடிந்துவிடும்; பயப்படாதிங்கோ.

பத்ம:—பகவான் இருக்கிறுன். (போகிறார்)

மூன்றுங்களம் முற்றிற்று.

களம் 4.

பாத்திரங்கள்:—

பத்மகிரீச ஐயர்.

பங்கஜம்.

கைலாசம் ஐயர்:—பத்மகிரீசரின் மாமன் பிள்ளை, (செட்டியார் குமஸ்தா)

திருமணபோடு:—ஒரு பணக்கார நாட்டுக்கோட்டைச் செட்டி.

வாசு குருக்கள்:—கோயில் குருக்கள் யாசகம்.

ஸ்ரீரங்காசாரி
கிருஷ்ணய்யர் } யாசகம்.

கோபாலன்:-- கிருஷ்ண ஐயர் பேரன்.

ப்ருஹன்னுத சாஸ்திரி:--யாசகம்.

இன்னும் பல யாசக பிராம்மணர்கள்.

வேலையாட்கள் இருவர்.

காலம்:--காலை மணி எட்டு.

இடம்:--செட்டியார் வீடு.

பத்ம:--(பங்கஜம் கூடே யிருக்கிருள்) டே கைலாசம்! டே கைலாசம்!! (என்று உறுதியான தணிந்த குரலில்)

கைலாசம்:--(அறையில் இருந்து வெளியே வந்து) என்ன மாமா! எங்கே ரொம்ப தூரம்?

பத்ம:--செட்டியார் இருக்கிருரா?

கைலாசம்:--மாடிலே இருக்கார்? இன்னுஞ் செத்தேநேரஞ் செல்லும் கீழே வர; என்ன விசேஷம்?

பத்ம:--என்னப்பா! நம்ம பங்கஜத்திற்கு வயசாலையா? இன்னிக்கொ, நாளேக்கொன்னு இருக்காளே; அதற்குத் தானே ஒரு வரனேப்பார்த்து வைச்சிருக்கென்; இந்த வருஷம் பி. ஏ., (B A.,) பரீக்ஷை கொடுப்பானும்; பின்னுலேசீமைக்குப்போய் இந்த கலெக்டர்பரீக்ஷையாமே அத்தை பாஸ் பண்ணனும் என்று இருக்கானும்; வாதக்ஷிணை 2000 மாவது கொடுக்கணும்போல் இருக்கு; கையிலே பணம் இல்லாமே போகல்லே; இருந்தாலும் இத்தானே சமயம்: இந்த சூத்திரப் பயல்களண்டே ஏதாவது கேட்டுப்பிடுங்க; உன்னே நம்பிதான் வந்தேன். நேற்று மத்தியானம் ஆத்தண்டே வந்திருந்தேன்; உன்னேக்காணும்.

கைலாசம்:—ஆமாம்; நம்ம செட்டி இன்னு கொடுக்கப் போகிருன். 100 அல்லது 200 கொடுத்தால் அதிகம்.

பத்ம:—ஒரு ஆயிரமாவது வாங்க முடியாதா; என்ன தரித்திர காலமா யிருக்கு இது.

கைலாசம்:—எல்லாம் அதிர்ஷ்டம் வர்ரது, இரும் மாமா, பங்கஜத்திற்கு. நம்கணபதிசாஸ்த்திரி இருக்காரே, கணபதி சாஸ்த்திரி அவர் ஒரு நல்லவழி பண்ணி இருக்கார்.

பத்ம:—நம்ம ஜோசியர் கணபதி சாஸ்த்திரியா? என்ன? என்ன வழி? நமக்கு எதாவது கிடைக்குமோ?

கைலாசம்:—சொல்ரேன் இருமே. (மெல்லிய குரலில்) நம்மச் செட்டிக்குப் பெண் குழந்தை கிடையாது, அவனுக்குப் பெண் குழந்தைஇண்ணு உயிரு; அந்தச் செட்டிச்சிக்கும் அப்படித்தான். அதிலேயும் நம்மவா குட்டிகோ இன்னுக்கே நம்மச் செட்டிக்குப் பிராணன்.

பத்ம:—அப்படியா? அதற்குத்தான் நம் பங்கஜத்தைக்கூட அழைச்சிண்டு வந்திருக்கேனே! அப்புறம்.

கைலாசம்:—இத்தே காரணமா வைச்சிண்டு நம்ம கணபதி சாஸ்த்திரிகள் என்ன செய்தார் இன்னுக்கா; செட்டி ஜாதகத்திலே யேதோ தோஷம் இருக்கென்னு சொல்லி, அதற்கு ஒரு 1000 ரூபா செலவிலே சாந்தி செய்தற்கு எற்பாடு செய்திருக்கார்.

பத்ம:—மொத்தமே 1000 ரூபா இன்னுக்க அதிலே நமக்கென்ன கிடைக்கப் போகிறது?

கைலாசம்:—இருமே நான் சொல்ரே? அந்த சாந்தி செய்தானதும் நம்மவாகுட்டிகோ ஒருஎழுபேருக்கு மண்தானம்

செய்யணுண்ணு சாஸ்த்திர ஸ்மிரிதி பிராண இதிகாச ஆதாரமெல்லாம் எடுத்துக்காட்டி வைச்சிண்டு இருக்கார். செட்டி அநேகமாய் ஒத்துக்குவான்.

பத்ம:—மண்ணின்னுக்கா?

கைலாசம்:—பூமி மாமா, பூதானம்.

பத்ம:—ஓ! ஓ!! (நகைக்கிறார்) எவ்வளவு காணி கிடைக்கும் நமக்கு.

கைலாசம்:—ஒரு கிராமத்திலே நல்ல ஆற்றுக்கால் பாய்ச்சலிலே சுமார் 20 அல்லது 22 எக்காராவுக்கு ஒரே சதுரமாய் இருக்கு: போன வருடம்தான் அதைச் செட்டி வாங்கினான். அத்ததான் தானங் கொடுக்கலாமென்று சொல்லலாமென்று இருக்கேன்.

பத்ம:—அப்படி இன்னுக்கா, நம்ம பங்கஜம் பங்குக்கு 3 எக்காராவுக்கு வருமே.

கைலாசம்:—ஆமாம் 3 எக்கரா என்னாலும் 6000 ரூபாய் தாளாதா, வேட்டைதானே கிடைக்கிரவன்பாடு! நமக்கு ஒரு பெண்ணு இல்லையே என்று வருத்தமாய் இருக்கு.

பத்ம:—நம் பெண்ணு என்றால் என்ன? உம்பெண்ணு என்றால் என்ன? எல்லாம் ஒன்றுத்தானே; நம்ம பங்கஜத்திற்கு ஒரு தானத்திற்கு எப்படியாவது ஏற்பாடு செய்துவிட வேண்டும்?

கைலாசம்:—பார்ப்போம்; எனக்கும் ஆசைதான். இந்த கணபதி சாஸ்த்திரிக்கு 3 பொட்டை பசங்க இருக்கு. அவர் அகத்துக்காரிக்குத் தங்கை பெண்ணு ஒருத்தி

இருக்கா; மச்சான் பேத்தி ஒரு குட்டி இருக்கு, இன்னொரு ஏழை பிராமணன் நம்ம நெருங்கிய உறவு தான்; 2000 ரூபாய் வரைக்கும் எனக்குக் கொடுக்கிறேன் என்று சொல்லி ஒரு தானத்திற்கு ஏற்பாடு செய்யச் சொல்லி இருக்கான்.

பத்ம:—நம்ம தானத்திற்கும் 2000 ரூபா வச்சிக்கிலாமே கைலாசம், அதைப்பற்றி என்ன. கணபதி சாஸ்த்திரி ஐந்து தானத்திற்கும் என்ன கொடுக்கப்போகிறார்?

கைலாசம்:—இன்னும் ஒண்ணும் முடிவாகலே மாமா நீர் அப்படி இரும்: யார்யாரோவர்ரா? இரகசியமாய் இருக்கட்டும் இந்தச் சங்கதி. செட்டியை வெறும்மெ பார்த்துட்டுபோக வந்ததா சொல்லும்; நானும் இன்னுறென்று சொல்லுகிறேன். (பத்மகிரீசர் ஒருபுறமாகப் போய் உட்காருகிறார்)

(வாசு குருக்கள் கையில் தேங்காய்முடி, புஷ்பம், விபூதி எடுத்துக்கொண்டு வருகிறார்; ரங்காச்சாரி முதலியோர் ஒவ்வொருவராக வந்து, ஒருவருக்கொருவர் செட்டியார் இல்லையா என்று விசாரித்துக்கொள்ளுகிறார்கள். ஒவ்வொருவராக உட்காருகிறார்கள்)

(வேலையாள் ஒருவன் வந்து நாற்காலி மேஜை பெஞ்சு முதலியவற்றைத் துடைக்கிறான்)

கிருஷ்ணய்யர்:—(வேலையாளைப் பார்த்து) அப்பா செட்டியார் வர்ராரா?

வேலையாள்:—உட்காரு சாமி, வருவார்; (என்று முறப்பாகக் கூறுகிறான்) (செட்டியார் வருகிறார், ஒரு வேலையாள் கூடவேவருகிறான். பார்ப்பனர்களெல்லாம் எழுந்திருக்

கிறார்கள்; வாசு குருக்கள் முன்னே சென்று விபூதி கொடுத்து, தேங்காய்முடியையும் கொடுக்கிறார்; செட்டியார் விபூதியைப்பூசிக்கொண்டு தேங்காயை மேஜையின்மேல் வைத்துவிட்டு பெஞ்சியில் உட்காருகிறார்; வேலையாள் விசிருகிறான்)

(சிறிது நேரம் சும்மா யிருந்து)

வாசு குருக்கள்:—செட்டியார் அவாள் ஒருமுறை வந்து நம்ம கோவிலைப் பார்வையிடணும்; இந்த வருஷம் நம்ம சொனுமனு அவாள் சாமிக்குக் காலை சந்திக்குப் பிட்டு, தேன்குழல், சர்க்கரைபொங்கலுக்காக மாதம் 30 ரூபாயிக்கு எற்பாடு செய்திருக்கிறார்; மற்றக்காலங்களெல்லாம் இவ்வளவு சிறப்பாக நடப்பதற்கில்லை; செட்டியார் அவாள், தருமத்தாலே இன்னொரு காலத்துக்கு சாமிக்கு பால் பாயசம், சொஜ்ஜப்பம், மிளகு வடை, நைவேத்திய மாக்கலாமே என எனக்கு சேன நாளாய் எண்ணம்.

செட்டி:—சரி, சாமி, மாசம் 30 ரூபா இருந்தால்போதுமா, என்ன?

வாசு:—ஆ! ஆ!! இன்னும் 10 ரூபா கூட இருந்தாக்கா செட்டியார் அவாள் தருமம் மெத்த சிறப்பாக நடந்து போகும்.

செட்டி:—சரி, ஓய் கணக்கப்பிள்ளை இந்தச் சாமிக்கு ஒரு நாற்பது ரூபாய் கொடுத்தனுப்பும். மாசம் மாசம் வந்து வாங்கிக்கொண்டு போகலாம் சாமி.

(வாசு குருக்கள் சந்தோஷத்துடன் போகிறார்)

(கணக்கப்பிள்ளை கைலாசம்ஐயர் அறையிலிருந்து வெளியேவந்து குருக்களை அழைத்துச் செல்லு கிறார்)

ஸ்ரீரங்கம்:—(கும்பிடு போட்டு) செட்டியார் தயவிருக்கணும்; நம்ம ஆத்திலே குழந்தை ருதுவாய் இருக்கா?

செட்டி:—சரி, என்ன அதுக்கு இப்போ இன்னே?

ஸ்ரீரங்கம்:—சுபசடங்கு நடக்கவேண்டி இருக்கு; செட்டியார் அவாள் தயவு இருக்கணும்; ஏழைப் பிராம்மணன்.

செட்டி:—சரி, ஓய் கணக்கப்பிள்ளை இந்த சாமிக்கு ஒரு 10 ரூபா கொடுத்தனுப்பும்.

ஸ்ரீரங்கம்:—எஜமானுள் இன்னும் கொஞ்சம் மனசை பெருசு பண்ணனும்; நான் ரொம்ப ஏழை, தருமப் பிரபு.

செட்டி:—என்னடா எளவாய் இருக்கு; ஓய் கணக்கப்பிள்ளை பதினஞ்சாய்க் கொடுத்தனுப்பும்.

(போகிறார்)

கிருஷ்ணய்யர்:—பிரபுவே! அநாதரக்ஷகா பரிதேசியாய் இருக்கோம்; இது நம்ம பேரப்பிள்ளை பிப்த்து பாரம் (Vth Form) வாசித்திருக்கிறான், சம்பளம் கொடுக்க முடியிலே; சாப்பாட்டிற்கேதிண்டாட்டமாய் இருக்கு, பரமதயாளு.

செட்டி:—எளவு என்ன இந்தக் கிழச்சாமிக்கு! (பையனைப் பார்த்து) என்ன சாமி நல்லா படிக்கிறீமா? (பையன் கும்பிட்டுத் தலையாட்டுகிறான்)

கிருஷ்ணய்யர்:—மகாப்பிரபு! காமதேனு, கற்பக விருக்ஷம்போல கொடுக்கக்கூடிய தர்மப் பிரபு.

செட்டி:—ஓய் கணக்கப்பிள்ளை இந்தச் சாமியண்டே ஒரு ஐந்து ரூபாய் கொடும்.

(கிருஷ்ணய்யர் போகிறார்)

பருஹன்:—(கும்பிட்டு) தகப்பனாருக்கு ஸ்ராத்தம் வர்ரது; ஏழைப் பிராம்மணன். மனுஷப் பிறப்பே சிலாக்கியம்; அதிலேயும் பிராம்மணனா பிறக்கிறது பாம சிலாக்கியம்; அப்பேற்பட்ட பிராம்மணாளுக்கு தாராள சிந்தையோடே உதவி செய்யிர பிரபுவைப்போல உத்கிருஷ்டமானவாள் யார் இருக்கா; அதிலேயும் சிராத்திற்கு உதவி செயாது மேலான புண்ய மென்று வேதத்திலேயே சொல்லப்பட்டிருக்கு.

செட்டி:—இதென்ன எளவு சாமி! என்ன ஆகும் சிராத்தத்திற்கு?

பருகன்:—தருமப் பிரபு, மனசிலே தோன்றதைக் கொடுக்கலாம்.

செட்டி:—ஓய் கணக்கப்பிள்ளை இந்தச் சாமி கிட்ட ஒரு 10 ரூபாய் கொடுமையா; (பருஹன் போகிறார்) (பத்மகிரீஸ்வர ஐயர் சற்று முன்னே வருகிறார் பங்கஜத்தையும் முன்னே தள்ளிக்கொண்டு)

செட்டி:—நீர் யாருமையா.

பத்ம:—செட்டியார் அவாளை, வெருமெ தரிசனம் பண்ணிண்டு போகலாமென்னு வந்தேன்.

செட்டியார்:—இந்த குட்டி யார்? (பங்கஜம் சிரித்துக் கொண்டே உடலை அசைக்கிறாள்)

பத்ம:—நம்ம குழந்தைதான் பிரபு.

செட்டி:—(பார்த்து சந்தோஷப்பட்டு) ஓய் கணக்கப்பிள்ளை ஒரு ரூபாய் கொடும்.

கைலாசம்:—இவாள் தான் எங்கள் மாமா; செட்டியார் அவாளை வந்து பார்க்கணு மென்று ரொம்பநாளா சொல்லிண்டே இருந்தா.

செட்டி:—ஓ அப்படியா! என்ன விசேஷம்.

பத்ம:—ஒன்றுமில்லை தர்மப் பிரபுக்களைக் கண்டுட்டுப் போகலாமின்னுதான் வந்தேன். வரும்போது குழந்தையும் கூட வரேனின்னு ஓடி வந்துட்டா.

செட்டி:—ஓ! ஓ!! சந்தோஷம் ஓய் கைலாசம் ஐயர் அப்போ இந்தக் குட்டியிடம் ஒரு 5 ரூபாய் கொடுத்தனுப்புமையா.

பத்ம:—எஜமான்வாள் தயவு இருக்கணும் ரூபாய் என்னத்திற்கு?

செட்டி:—சரி, போய் வாருமையா; எதாவது வேண்டியிருந்தா வந்து பாரும்.

பத்ம:—ஆ! ஆ!! அப்படியே, எஜமானுள் தருமப்பிரபுவினுடைய தருமந்தான் இந்தக் கலியுகத்திலே பிராம்மணுளை ரக்ஷிக்கிறது; தருமம் தலை காக்கும்.

(கும்பிட்டுப் போகிறுர்)

வேலையாள்:—ஐயா! வெளியே இன்னும் சுமார் 20 பிராம்மணுளுக்குக் காத்துக்கொண்டிருக்கிறுர்கள்.

செட்டி:—எளவு, இருக்கச் சொல்லு பார்ப்போம்.

நான்காம் களம் முற்றிற்று.

களம் 5.

பாத்திரங்கள்:—

கைலாசம் ஐயர்.

பத்மகிரீச ஐயர்.

வாசுதேவ குருக்கள்:—கோயில் அர்ச்சகர்.

நாய்க்கர் இருவர்.

சுந்தரமூர்த்தி:—கோயில் வேலை.

காலம்:—மாலை 6 மணி.

இடம்:—சிவன் கோவில்.

(வாசுதேவ குருக்கள் கட்டில் வில்வத்துடன் உட்கார்ந்திருக்கிறார்)

வாசுதேவ குருக்கள்:—என்ன இவாளே இன்னும் காணோம் இந்தக் கைலாசம் ஐயர் கூட வர்லையே; (கைலாசம் ஐயர் வருகிறார்) வாருங்கோ; வாருங்கோ; நூராயுசு உங்களுக்கு; என்னடா காணோமே இண்ணு; இப் போதான் சொல்லிக்கொண்டு இருந்தேன்; செட்டியா ரவாள் பின்னாலேயே வாராளோ?

கைலாசம் ஐயர்:—ஆமாம், இதோ வந்துட்டா அவாளும்.

வாசு:—வரட்டுமே! எல்லாம் தயாராய் இருக்கு; இங்கு சாமிக்கு அபிஷேகம், அலங்காரமெல்லாம் ஆயுட்டது தீபாராதனைதான் ஆகவேண்டும்.

கைலாசம்:—ஓ! சரிதான், (பத்மகிரீச ஐயர் வருகிறார்) ஓ, இவர் எங்கே வர்ரார் இங்கே; (அவர் அருகே வந்தவுடன்) என்ன மாமா, எங்கே இப்படி வந்துட்டேள்?

பத்ம:—(மெல்ல) செட்டி வாரான் இன்னு சொன்னுளே கோயிலுக்கு.

கைலாசம்;—(சிரித்து) இன்னும் வால்லே இங்கே எதற்காக வந்தீர் நீர்?

பத்ம:—என்ன ஆச்சி அந்த விஷயம்?

கைலாசம்:—எல்லாம் நாளேக்கு ஆத்தண்டை வாருமே சொல்ரேன்; செட்டி வந்துடுவான்; அதோ ஏதோ வண்டிசப்தம் கேழ்க்கிராப்போல் இருக்கு: நீர் இங்கே தான் இரும், (செல்கிருன்) (பத்மகிரீச ஐயர் விநாயகரைக் கும்பிடுகிருர்)

பத்ம:—சர்வ வல்லபா! விநாயகமூர்த்தி! எல்லாத்தையும் நீர் தான் செட்டி மனசிலே இருந்து நன்னு முடிச்சி வைக்கனும்; ஒரு காய் சூரை விட்ரேன்; கணபதி! கணபதி!! (தாடையில் போட்டுக்கொண்டு உள் செல்லுகிருர்)

(இரு நாய்க்கர்களும் கையில் தேங்காய், பழம் எடுத்துக்கொண்டு வாசுதேவக் குருக்களிடம் வருகிருர்கள்)

நாய்க்கர்:—சாமி, சாமிக்கும் அம்மனுக்கும் பூஜை பண்ணனும்;

வாசு:—என்ன வர்ணம் நீங்கள்?

நாய்க்கர்:—நாங்கள் க்ஷத்திரியர் சாமி.

வாசு:—சரி, இந்தத்தட்டிலே தேங்காய்ப்பழத்தை வையும், தட்டை தொட்டுக்கப் போறீர்;

(பயந்து தூக்கித் தட்டில் வைக்கிருர்கள்)

வாசு:—சரி, தக்ஷிணை எங்கே?

நாய்க்கர்:—குடுக்கிறேன் சாமி, இருக்குது;

வாசு:—இங்கே வைச்சுடும் இப்படி சொல்ரேன்;

(இரண்டணா எடுத்து வைக்கிறார்கள்)

(பார்த்து விட்டு) பிச்சையா இது, கொடுக்கிறீங்கோ; (என்று கோபத்துடன் தேங்காய் முதலியவற்றை எடுத்து எறிந்துவிடுகிறார்)

நாய்க்கர்:—சுவாமி! தெரியாது எங்களுக்கு, மன்னிக்க வேண்டும். (தேங்காய்பழம்முதலியவற்றைப்பொறுக்குகிறார்கள்) என்ன கொடுக்கணுமோ சொல்லுங்களே சுவாமி கொடுத்துட்ரோம்.

வாசு:—நாலும், நாலும், எட்டு அணா வைக்கவேண்டும்;

நாய்க்கர்:—இருக்காதுபோல இருக்கிறதே பணம்; (உன்னிடத்தில் ஏதாவது இருக்கிறசாப்பா)

(என்று ஒருவரை ஒருவர் கேழ்க்கின்றனர்)

வாசு:—சரி, போய் பணத்தைப் பார்த்துண்டு வாங்கோ முன்னே?

நாய்க்கர்:—சுவாமி! 6 அணா இருக்கிறது கையில்;

வாசு:—இங்கு என்ன பிச்சையா கொடுக்கரீங்க; இதோ தேங்காய் பழத்தை இப்படி வைச்சுட்டு இரண்டணா கொண்டுவாபோங்கொ; கோயிலில் வேலைஎல்லாம்ஆன பிற்பாடுதான் அர்ச்சனை செய்வேன். துட்டை சமாளிச்சிண்டுவந்து பிரதக்ஷணம் பண்ணிண்டு இருங்கொ; இப்போ ஓர் செட்டியார் வரப்போகிறார் கோயிலுக்கு; உரக்கக் கத்தி பாடப்போரீங்க இங்க; சத்தம் பண்

ணப்படாது, பேசாமே சுத்திண்டுகெடக்கணும்; தூட்டு காலணா குறைஞ்சாலும் இங்கே வரப்படாது. (தலை யாட்டிவிட்டுப் போகிறார்கள்) இதென்ன இன்னும் இந்தச்செட்டியாரைக்காணோமே? சுந்தரமூர்த்தி இந்த விளக்குகளைத் தூண்டிக்கொண்டு வாடா வரிசையா; எத்தி வைச்ச ஊதுவத்தி எல்லாங்கூட அவிஞ்சி போறாப்போல இருக்கே; அந்தச் செட்டியைப் பார்க் கிறேன்.

சுந்திரமூர்த்தி:—விளக்கெல்லாம் நான் பார்த்துக்கொண்டே போரதா சாமி; (வாசு எழுந்து செல்லுகிறார்)

(தனியே, இந்தச்செட்டியைக் குல்லாப்போட்டு பணம் பறிக்கப்பார்க்கிறார் இந்த ஐயரு)

பத்ம:—ஏண்டாப்பா என்னையா சொல்ரெ; இந்தச் செட் டியை வெரும்மனெ பார்க்கணுமின்னுதான் வந் தேன்.

கந்தசாமி:—சாமி, உங்களையேன் சொல்ரேன் நானு; நான் பேசினது வேரே சங்கதி.

பத்ம:—இந்தச் செட்டி தாராளமா கொடுப்பானுமா?

சுந்தரமூர்த்தி:—அந்தஎழவெல்லாம் இங்கே யாருக்குத்தெரி யும்; பிராம்மணாளுக்கென்ன சரியானபடி புடிச்சிகினு எல்லாம் கரந்துடிரங்கோ செட்டியண்டை; எங்க ஐய ரைப் பாருங்களேன்? இத்தினி தேதியாச்சி இன்னும் என் சம்பளத்தைக் கொடுத்தபாடில்லை; செட்டியைத் தலையைத் தடவி கோயிலுக்கு, அதுக்கு, இதுக்கு இன்னு 1000 அல்லது 2000, புடுங்கப் பார்க்கிறாரு;

பத்ம:—(தனியே) நம்ம எண்ணம் பலிக்குமா? பங்கஜம் ஜாதகம் அதிர்ஷ்டம்தான். பகவான் இருக்கணும், செட்டி மனசிலே நல்ல எண்ணத்தை உண்டாக்கி வைக்கணும், கிருபாநிதி!

ஐந்தாம் களம் முற்றிற்று,

களம் 6.

பாத்திரங்கள்:—

கைலாச அய்யர்.

பத்மகிரீச அய்யர்.

திருநாவுக்கரசு } இரண்டு தமிழ் மாணவர்கள்.
முருகேசன் }

நாராயண முதலி:—80 வயது கிழவர்.

காலம்;—காலை 9 மணி.

இடம்:—செட்டி வீடு.

பத்ம:—கைலாசம்! செட்டி இருக்கிறரா?

கைலாசம்:—இல்லேங்கோ மாமா.

பத்ம:—ஆத்தண்டே போனேன்; இப்போதான் போய் விட்டதாக சொன்னு; ஓடி வர்ரேன்; என்ன நம்ம காரியம் எவ்வளவிலே இருக்கு. நேற்று கோயிலிலே என்னண்டே நன்னுத்தான் வார்த்தை சொன்னன் செட்டி.

கைலாசம்:—எல்லாம் முடிஞ்சாப் போலத்தான்.

பத்ம:—பத்திரம் எழுதியாச்சா?

கைலாசம்:—இன்னக்கி எழுதிடுவேன்.

பத்ம:—அந்த கணேச சாஸ்திரி பசங்களுக்குக்கூட ஆயுட்தா?

கைலாசம்:—எல்லாமாச்சி; ஆனுக்கே, நம்ம பத்திரம் மாத்தம் எழுதிடப் போரேன்.

பத்ம:—அப்படியா! நல்ல வேலை சேசே. அவாள்த எல்லாம் இப்போ வைச்சுண்டா வம்பாய் இருக்குமென்னு பயந்துண்டு இருந்தேன்.

திருநாவுக்கரசு:—சாமி! (கும்பிடுகிருன்)

கைலாசம்:—யார்டா அது?

திருநாவுக்கரசு;—செட்டியார் இருக்கிறரா? இன்றைக்கு வரச்சொல்லி இருந்தார்.

கைலாசம்:—ஓ! அன்றைக்கு வந்து சம்பளத்திற்கு கேட்டையே நீதானு அது? செட்டி இல்லேபோ; இங்கே நிக்காதே போ.

கைலாசம்:—இந்தச் சூத்திரா, தொல்லே பெரிய தொல்லேயா போச்சு. இப்போ பிராம்ணுளேப்போல் வந்துட்டா யாசகத்துக்கு.

முருகேசன்:—சாமி, (கும்பிடுகிருன்)

கைலாசம்:—போடா போ, இங்கே செட்டியார் இல்லே.

முருகேசன்:—சாமி, செட்டியார் அண்ணேக்கே தங்கஎண்டை சொன்னுருங்கோ 1 ரூபா கொடுக்கச் சொல்லி.

கைலாசம்:—தெரியும் எனக்கு.

முருகேசன்:—நாளைக்கு வரட்டுங்களா?

கைலாசம்:—இன்னும் ஒரு மாசத்திற்கு இங்கே வராதே போ, போ; (முருகேசன் போகிறான்)

பத்ம:—சூத்திராளுக்குக்கூட செட்டி கொடுக்கிறாரா என்ன? சாஸ்திரத்திலே பிராம்மணாளுக்குத்தானே யாசகம் தர்மமாய் ஏற்பட்டு இருக்கு.

கைலாசம்:—செட்டி நல்லவன்தான்; இந்த காலத்திலே பிராம்மணாளை வைதுக்கினே ஒரு கக்ஷி இருக்கோ அன்னா? அதிலே, இவனை ஒர்த்தர் ரெண்டுபேர் வந்து கலச்சிட்டு பூட்ரா. திராவிடன், குடியரசு இது களை வாங்கச்சொல்லி தொந்திரவு பண்ணிட்டா; இதெல்லாமன்னா சாஸ்திரமா போச்சு சூத்திரா ளுக்கு இந்தக் காலத்திலே. ஆனா நான் இங்கே வர்ர வாளை விரட்டி அடிச்சுண்டுதான் இருக்கேன்; இரண் டாவது வந்துதே அந்த தரித்திரத்துக்கு மாசம் 1 ரூபா கொடுக்கச்சொல்லி செட்டி 10 நாளாகுது. இன் னும் கொடுக்காமையே விரட்டி அடிச்சுண்டு வர்ரேன். 10 தடவை இப்படி அடிச்சாக்கே தானா நின்று போகுதுங்கோ கழுதைகோ.

நாராயண முதலி:—சாமி, செட்டியார் இருக்காருங்களா? ரொம்ப பசியாய் இருக்குது ஏழை.

கைலாசம்:—ஓய் கிழம்! போம், போம், வெளியிலே போம். இங்கே ஒன்றும் கிடையாது.

நாராயண:—செட்டியாரைப் பார்க்கிறேன் சாமி.

கைலாசம்:—செட்டியார் இங்கே இல்லை போம்; இங்கே நிற்கப்படாது. (கிழவர் போய் விடுகிறார்) மாமா,

அப்போ, நீர் போய் வாரும்; நாழியாரது, நாளைக்கே பத்திரம் ரிஜிஸ்தர் பண்ணிவிடலாம். காலமெ சாப்பிட்டு ஆத்தண்டை வந்துடுங்கோ; நம்மை ஞாபகம் வைச்சுண்டு இருக்களோ என்னமோ.

பத்ம:—ஆ! ஆ!! நாளைக்கு காலமத்தான் ஆத்தண்டை வர்ரனே; பத்திரத்தை இன்னைக்கே எழுதி வைத்திரு, வர்ரேன். (போகிறார்)

ஆறும் களம் முற்றிற்று.

களம் 7.

பாத்திரங்கள்:—

பத்மகிரீச ஐயர் (இரண்டு ஐயர்களுடன்)

கைலாசம் ஐயர்:—செட்டியார் குமஸ்தாவும் ஏஜண்டும்

நர்சிம்ம ஆச்சாரியார் (இரண்டு ஐயங்கார்களுடன்)

சப்ரிஜிஸ்திரார்:—(ஐயங்கார்)

நாயுடு, படையாக்ஷி, முதலியார் முதலியவர்கள்.

மண்ணுங்கட்டி:(ஆதித்திராவிடன்)

கோவிந்தன்:—சப்ரிஜிஸ்திரார் சேவகன்

இடம்:—சப்ரிஜிஸ்திரார் ஆபீஸ்.

காலம்:—காலை மணி 11.

(ஆபீசு முன்பு நாயுடு முதலியவர்கள் பத்திரங்களை வைத்துக்கொண்டு உட்கார்ந்திருக்கிறார்கள்) (சப்ரிஜிஸ்திரார் வருகிறார், சேவகன் மைப்பலகையைத் தயாரிக்கிறான்) (எல்லாரும் எழுந்து நிற்கிறார்கள்)

சப்ரிஜிஸ்திரார்:—போங்கடா, போங்கடா, போங்கடா; எட்ட போங்கடா; கர்மம், கர்மம்; அப்பா! சூத்திரக் கூட்டத்தைப் பாருங்கடா; அடே கோவிந்தா! விரட்டி யடியடா இவாளெல்லாம்.

கோவிந்தன்:—(ஜனங்களைப் பார்த்து) தூரப்போய் இருங்கள்; கூப்பிடும்போது வரலாம்.

முதலியார்:—(சப்ரிஜிஸ்திராரிடம் வந்து கும்பிட்டு) பெண்டுங்கோ வந்திருக்காங்கோ கொஞ்சம் சீக்கிரம் முடிச்சுக் கொடுத்திடுங்கோ சாமி.

சப்ரி:—டே கோவிந்தா! என்ன வெரும்ம இருக்காயே கழுத்தைப் பிடித்துத் தள்ளடா இந்த முதலிப்பயலை.

(சேவகன் அருகே போக; முதலியார் எட்ட போய்விடுகிறார்) (சப்ரிஜிஸ்திரார் இந்தக் கணக்கையும் அந்தக் கணக்கையும் புரட்டுகிறார்)

நாயுடு:—(சற்றுப்பொறுத்து சப்ரிஜிஸ்திரார் முன் வந்து கும்பிட்டு) சாமி தள்ளாத கிழவர் காயலாக்காரர், படுக்கையோடு கூட்டிக்கொண்டு வந்திருக்கிறோம். கொஞ்சம் தயவுசெய்து கவனிக்கணும்.

சப்ரி:—போங்காணும்; வெளியே போங்காணும்; கர்மம், கர்மம்; இந்தச் சூத்திரப் பயல்களுக்கு என்ன அவசரம். பிராம்மணுத்தான் உத்தியோகத்துக்கு வரப்படாது, பிராம்மணு பிறந்ததனுலேயே அவன் பாபியாப்போகிறுன். இந்த காலத்திலே இப்படி இருக்கே; இந்த சூத்திராளுக்கு என்ன இங்கே சௌகரியம் பண்ணனுமிண்ணு. கர்மம் கர்மம்; வெளியே போங்காணும். (நரசிம்மாசாரியார் பத்திரத்தோடு வருகிறுர், கும்பிடுகின்றுர்.)

சப்ரி:—(கும்பிட்டு) தேவாள் எள்ணம், இப்படி வந்தி டுங்கோ, இப்படி எள்ணம்.

நரசிம்:—இருக்கட்டும்; இருக்கட்டும்; தேவாள் சொம்மா இருக்கட்டும் (என்றுஉட்காருகிறார்) (மற்றும் இரண்டு பிராம்மணர்கள் வருகிறார்கள்.)

சப்ரி:—கோவிந்தா! நாற்காலி எடுத்துப்போடடா.

கோவிந்:—எஜமானே! (எடுத்துப் போடுகிறான்)

சப்ரி:—வரலாம், இப்படி எள்ளாம்.

(இருவரும் உட்காருகின்றனர்)

என்ன விசேஷம்? (நரசிம்மாச்சாரியார் பத்திரத்தைக் கொடுக்கிறார்)

சப்ரி:—சரி, தேவாள் பேர் என்னவோ?

நரசி:—நரசிம்மாச்சாரி.

சப்ரி:—ஓ, சரி. இந்தப்பத்திரம் தேவாபேருக்குத்தான் போல் இருக்கு?

நரசி: —ஆ, மாம்.

சப்ரி:—மண்ணுங்கட்டி என்ற பறப்பயல் எழுதித்தர்ரானோ?

நரசி:—ஆ, மாம்.

சப்ரி:—இவா ரெண்டுபேரும் சாட்சியோ?

நரசி:—ஆ, மாம்.

சப்ரி:—இந்தப் பறப்பயல் வந்திருக்கானோ அன்னோ?

நரசி:—ஓ; வந்திருக்கான்.

(மண்ணுங்கட்டியை அழைக்க எழுந்திருக்கிறார்)

சப்ரி:—தேவாள் இருக்கலாம்; தேவாள் இருக்கலாம். டே கோவிந்தா! அந்த மண்ணுங்கட்டியைக் கூப்பிட்ரா!

கோவிந்:—எஜமானே! இதோ கூப்பிடுகிறேன். மண்ணுங்கட்டி! மண்ணுங்கட்டி!! மண்ணுங்கட்டி!!! (மண்ணுங்கட்டி ஆபீசுக்கு வெளியே இருந்து அருகே ஓடி வருகிறான்)

சப்ரி:—எ! எட்ட போடா; எ! எட்ட போடா; கர்மம், கர்மம். ஓடி வார்ரத்த பாருங்கோ, பிராம்மணுளாச்சே இண்ணு எதாவது அச்சமிருக்காண்ணு.

மண்:—(பயந்து பின்னாலேயே ஓடி நின்று வளைந்து) சாமி! (என்று கும்பிடுகிறான்)

சப்ரி:—(நரசிம்மாச்சாரியாரைப் பார்த்து) இந்தப் பயல் தானே?

நரசி:—ஆ, மாம்.

சப்ரி:—நரசிம்மாச்சாரியார் அவர்களுக்கு ஒரு ஆள் அடமானப்பத்திரம் எழுதித் தர்ரயாடா?

மண்:—சாமி! ஆமாங்கோ, எங்க ஐயருக்குத்தான். நானும் என் பொஞ்சாதியும் பண்ணை வேலை செய்யாரத்துக்குங்கோ சாமி.

சப்ரி:—25 ரூபாய் பெற்றுக்கொண்டாயாடா?

மண்:—சாமி; ஆடி அாவட்டையிலே கஞ்சிக்கில்லாதபோயி நம்ப ஐயரண்டே 2 பதக்கு நெல்லுவாங்கி காச்சிக் குடிச்சிட்டோம் சாமி! அதுக்கு வட்டியும் முதலும் 25 ரூபா ஆவுதுங்கொ சாமி!

சப்ரி:—இந்தப் பத்திரத்துக்கு ஆறணு ஆறது பீசு.

நரசி:—ஆ, ஆ, இதோ இருக்கு (எடுத்து வைக்கிறர்) (சப் ரிஜிஸ்டார் பெட்டியில் எடுத்துப் போடுகிறர்)

சப்ரி:—சரி, (பத்திரத்தின் மீது எழுதவேண்டியதை எழுது கிறர். பின்பு கோவிந்தன் கையில் பத்திரத்தைக் கொடுத்து) டேகோவிந்தா! ஜாக்கிரதை எட்ட இருந்து விரல்குறி வாங்கிண்டுவா, தொட்டுண்டு வந்து சேரப் போரெ; கர்மம், கர்மம்;

(கோவிந்தன் பத்திரத்தையும் விரல்குறி வாங்கற் குரிய சாமான்களையும் எடுத்துக்கொண்டு போகி ருன்)

கோவி:—(மண்ணுங்கட்டியைப் பார்த்து) பீசக்கையைக் காட்டு; (மண்ணுங்கட்டி காட்டுகிருன்) டே, மண் ணுங்கட்டி! இதோ பார், இப்படி வைச்சி இப்படி உருட்டணும். (செய்து காட்டுகிருன்)

(மண்ணுங்கட்டி நடுநடுங்கிக்கொண்டு தவருக விரல் வைத்து அழுத்தப்போகிருன்)

கோவி:—(கையில் வைத்திருந்த கட்டையினல் விரல்மீது அடித்து பயமுறுத்தி) டே, கம்பளி, களிஉருண்டெ, இதோ பார்; இதோ பார்; இப்படி வச்சி, இப்படி உருட்டண்டா? (மண்ணுங்கட்டி உருட்டுகிருன் அடை யாளம் எடுக்கப்படுகிறது, பத்திரத்திலும் புத்தகத்தி லும்)

சப்ரி:—(இதுவரை அடையாளம் எடுப்பதைப் பார்த்துக் கொண்டிருந்தவர்) கர்மம், கர்மம், ஜென்மாந்திர கர் மத்தால்தான் இந்தப் பறப்பயல்களையும் சூத்திரப்பயல் களையும் பொழுது வடிஞ்சா பொழுதுபோனு கட்

டிண்டு அழவேண்டியதாச்சு. (கோவிந்தன் பத்திரத்தைக் கொண்டுவந்து இரண்டு அய்யங்கார்களிடம் சாட்சி வாங்குகிறான். பின்பு சப்ரிஜிஸ்திராரிடம் கொடுக்க அவர் கையெழுத்துப்போட்டு) சரி தேவாள் போகலாம். (என்று கும்பிடுகிறார்) டே கோவிந்தா அந்தப்பறப்பயலே எட்ட ஓடச்சொல்லடா, என்ன தைரியம், எதிரிலேயே நிண்ணிண்டு இருக்கான் பாருங்கோ, இந்தப் பறப்பயல்களுக்கும் சூத்திரப் பயல்களுக்கும் என்ன கர்வம் பிடிச்சிருக்கு இந்தக் காலத்திலே!

நரசி—மற்ற இருவரும்:—ஆமாண்ணா, கலிகாலம் மன்னோ இது. இந்தப் பயகோ சொன்னப் பேச்சைக் கேக்கிறதா, பிராம்மணா இன்னு ஏதாவது பயந்து நடக்கிறதா? கவர்மெண்டார் இதற்கு துணையா இருக்காளே, அதுதானே ஆச்சரியமா யிருக்கு. தேவாள் தயவிருக்கணும், வரலாமா. (கும்பிடுகிறார்கள்)

சப்ரி:—செய்யுங்கள் (கும்பிடுகிறார்)

(பத்மகிரீச ஐயரும் கைலாசமையரும் மற்று இரண்டு ஐயர்களும் உள்ளே வருகிறார்கள்) வாருங்கோ; வாருங்கோ; இப்படி உட்காருங்கோ; (பத்மகிரீச ஐயரை கைலாசம் ஐயர் உட்காரச் சொல்ல, இவர் அவரை உட்காரச் சொல்ல இருவரும் உட்காருகிறார்கள்.) (சாட்சிகள் நிற்கிறார்கள்)

சப்ரி:—(கைலாசம் ஐயர் பத்திரத்தைக் கொடுக்க சப்ரிஜிஸ்திரார் வாங்கிப் பார்த்துவிட்டு) கைலாசம் ஐயர் யாரு?

கைலா:—நான்தான்.

சப்ரி:—ஓ, ஓ, தாங்கள்தான் இந்தச் செட்டியினுடைய ஏஜண்டா?

கைலா:—ஆமாம்.

சப்ரி:—பங்கஜம்மாள் என்றது யாரு?

கைலா:—(பத்மகிரீச அய்யரைக் காட்டி) இவாளுடைய மகள்.

சப்ரி: —பத்மகிரீச ஐயரவாளா இவாள்?

கைலாசமும், பத்ம:—ஆமாம்.

சப்ரி:—இந்தச் செட்டி, தனக்கு பெண் பிறக்கணுமின்னு, கிரக சாந்திசெய்து, அந்தச் சாந்தி பூர்த்தியிலே, இந்தப் பங்கஜம்மாளுக்கு, இந்தப் பத்திரத்தில் கண்ட, 6000 ரூபா பெறுமான, நிலங்களைத் தானமாய்கொடுத்திருக்கிறுரா?

கைலா:—ஆமாம்.

சப்ரி:—என்ன வயசு இருக்கும் இந்தப் பங்கஜம்மாளுக்கு?

கைலா:—பன்னிரண்டு வயசாரது.

சப்ரி:—அப்படியா? (சந்தோஷத்துடன்) இந்தக் காலத்திலே இந்தச் செட்டிமார்தான் பிராம்ணு இன்னு கொஞ்சம் மரியாதை வைச்சிருக்கா? அவாளாலேத்தான் உலகத்திலே தர்மம் என்றது இருக்கு. சரி, கைலாசம் ஐயர்! தாங்கள்தான் செட்டியாருக்காக அவர் ஏஜண்டு முறையிலே இந்தப் பத்திரம் எழுதிக் கொடுத்திருக்கிறீளா?

கைலா:—ஆமாம்.

சப்ரி:—சரி, பீசு பன்னிரண்டு ரூபாய் கொடுக்கணும். (பத்திரத்தின்மீது ஏதோ எழுதுகிறார்)

பத்ம:—தாங்கள் பிராம்மணாளா இருக்கரத்தொட்டுத்தான் இவ்வளவு சௌகரியமா வேலே நடக்கிறது இந்தக் காலத்திலே.

கைலா:—சூத்ரா தானே எங்கே பார்த்தாலும் வந்துட்ரா பெரிய வேலேக்கில்லாம்.

மற்றொரு பிராமணன்:—காலம் கலிகாலமாப் போச்சு.

ஏழாம் களம் முற்றிற்று.

களம் 8.

பாத்திரங்கள் :—

ஆபத்தாரண ஐயர்—பத்மகிரீச ஐயர் சம்பந்தி

ருக்மணியம்மாள்—ஷெயார் உறவினர்

ஜானகியம்மாள்—ஆபத்தாரணர் மனேவி

எர்ரபாலு செட்டி—பணக்காரக் கோமுட்டி

காலம்:—மாலே (2—30)

இடம்:—ஆபத்தாரணர் வீடு.

(ஆபத்தாரண ஐயர் தனியே உட்கார்ந்து கணக்குப் போட்டுக்கொண்டு இருக்கிறார்)

ஜானகி:—இதென்ன வெறும்மனே உக்கார்ந்திருந்தா எப்படி? செட்டிகளே கிட்டிகளேப் பார்த்து ஏதானும் வாங்

கிண்டு வந்தான்னே நன்னாருக்கும். இந்தச் சமயம் போய்ட்டாக்கே அப்பரம் வான்னு வருமா இன்னு? பையனுக்குக் கலியாணமின்னு சொன்னாக்கே கொடுக்கரவாளும் கொஞ்சம் நன்னு கொடுப்பா. இந்தப் பிராம்மணருக்கு ஒன்னுந் தெரியல்லெலயே.

ஆபத்:—டீ, நோக்கெல்லாம் தெரியும்; வெறும்மே இர்ரீ; அந்தக் கணக்குத்தான் இப்போ போட்டிண்டிருக்கேன்; 10 செட்டிகளைப் பார்த்தேன். இன்னும் 4 பேர் இருக்கா. இந்த நாட்டுக்கோட்டை மொட்டைத் தலையன்களும் இந்தக் கோமுட்டித் தொப்பைகளுந் தானே ஏமார்ரேன் இன்ரா. எந்த முதலிப்பய, ரெட்டிப்பய, நாயுடுப்பய கொடுக்கிறே னின்னுது? பாப்பானுக்கு ஏன் குடுக்கிறது இன்னு வைய ஆரம்பிச்சுட்ரதுகோ.

ஜான:—இவாளென்ன வெறும்மெ குடுக்கப் போராளா இன்னு; சாஸ்திரங்களிலே பிராம்மணாளுக்குக் கொடுக்கணுமின்னு சூத்ராளுக் கெல்லாம் விதிச்சிருக்கோ அன்னே.

ஆபத்:—சாஸ்த்ரோக்தமா நடக்கிறதா இன்னு இந்தக்காலத்திலே எல்லாம். தர்மம் தலேகீழான்னே போயிருக்கு. கலிகாலம். இதின்னு நம்ம ருக்மணி வர்ராப் போலே இருக்கே;

(ஜானகி ஓடிப் பார்க்கிறாள்)

(ருக்மணியம்மாள் மூட்டையோடு வருகிறாள்)

ஜான:—ருக்மணி! நோ ஊர்லே இருந்தா வர்ரே. இப்போது ஏது வண்டி?

ஆபத்:—இந்த ரெண்டுபணி வண்டி இல்லையோடி; என்ன விசேஷம், ஜானகி? பத்மகிரீசஐயர் பார்த்தாரா உன்னே வரும்போது,

ஜான:—எல்லாஞ் சொல்ரேன் மாமா? அந்த மூட்டை யெல்லாம் அப்படியே பின்புறமாக கொண்டுவந்து வைக்கச்சொல்லி விடனும், அந்த வண்டிக்காரப் பயலண்டே.

ஆபத்:—டே! சூத்ரன் தானே நீ.

வண்டிக்காரன்:—சாயபு சாமி.

ஆபத்:—இதென்ன கர்மமா போச்சு; அப்படியே பின் புறமா ஓட்டிண்டு வாடா வண்டியை, தரித்திரம்.

(ஆபத் போகிறார்)

ஜான;—வண்டி ருக்மணி உட்காரேன் இப்படித்தான், சாமா னெல்லாம் ஒங்க மாமா எறக்கி வைப்பார்; என்ன சங் கதி? எப்போ புறப்பட்டே?

ருக்ம:—அப்பா! இன்னிக்கி, இந்தச்சூத்ரக்கூட்டம் பிய்ச்சு பூட்டதுவண்டியிலே, காலமே போஜனம் பண்ணிண்டு பஸ் ஏர்னேன், பஸ்ஸிலேயும் சூத்திரக் கூட்டந்தான். ஒரு துலுக்கப்பய என் பக்கத்திலேயே உக்கார்ந்துட் டுது, அப்பா அது மேலே என்ன சென்டு இன்றே; மூக்கைத் துளைச்சூட்டுது, ஏதாவது எட்ட போன்னு போரானு இன்னு. மேலே இடிச்சிண்டு உட்கார்ந்துட் டான். இந்தப் பக்கத்திலே இன்னுக்கே ஒரு கிருஸ் துவப்பய தடியனட்டுமா இடிச்சிண்டு உட்கார்ந்துட் டான். எப்படாப்பா பஸ்ஸைவிட்டு எறங்கப்போரோம் இன்னு எண்ணிண்டு வந்தேன்.

ஜான:—ஆமாம் இந்த காலத்திலே பிராப்ணு இன்ற மரியாதை எங்கே இருக்கு.

ருக்ம:—இன்னும் கேளேன். பஸ்ஸைவிட்டு ரயிலண்டை வந்தாக்கே, ஒரே சூத்திரக் கூட்டந்தான். ஆனுல் ரயில்வே உத்தியோகஸ்தா ளெல்லாம் பிராம்ணுளா இருக்கா, அதுதான் ஒரு புண்ணியம்.

ஜான:—உத்தியோகம் ஒன்னு கூட பிராம்மணுளுக்குக் கொடுக்கப்படாது இன்னு இருக்காமே இப்போ கவர்மெண்டு ரூலு.

ருக்ம:—ரயில்லே அப்படி இல்லே மாமி, ரயில் தொரைமாரெல்லாம் பிராம்ணு இன்னு பக்ஷமாப் பார்க்கிரு. டிக்கட் கலெக்டர் ஓர் பிராம்ணர். அவர்தான் எனக்கு டிக்கட் வாங்கிக் கொடுத்தார், அநேகமா எல்லாருமே பிராம்ணுளாத்தான் ரயில் உத்தியோகத்திலே. இல்லாட்டாக்கே இவ்வளோ மூட்டை கொண்டுவந்தேனே சும்மா விட்டிருப்பாளா இன்னு; நான் ஏர்ன பெட்டியிலே ஒரு முதலி ஏரிண்டு இருந்தான். கையிலே ஒரு சின்ன பெட்டிதான் வைச்சிண்டு இருந்தான். அத்த நிறுத்து டிக்கட்டு வாங்கலே இண்ணு ஒரு பிராம்மண டிக்கட்டு கலெக்டர் வந்து பெட்டியை இறக்கிப் போட்டுட்டார்! பிற்பாடு அத்த நிறுக்கச் சொல்லி ஒன்னரை ரூபா வாங்கிண்டுதான் ஏத்தினு பெட்டியை.

ஜான:—(சிறிக்கிருள்) வேணும் வேணும் இந்தச் சூத்திரப் பயல்களுக்கு. அப்பா! என்ன அனியாயமாய் இருக்கு குளத்தண்டை போனுக்க இந்தச் சூத்திரக் கூட்டந்

தான். வாசல்லே போனுக்கே இந்தச் சூத்திரக் கூட்டந்தான். கோயிலுக்குப் போனாலும் இந்தச் சூத்திரக் கூட்டந்தான். எங்கே போனாலும் இந்த சூத்திரக் கூட்டந்தான் பிக்கிறது. பிராம்ஹ இன்னு மரியாதை இல்லாமெ போச்சு.

ஆபத்:—இன்னுமென்ன பேசிண்டே இருக்கிளே.

ஜான:—சரி, ருக்மணி நீ அப்படியே பின்புறமா வந்துட்ரீ ஸ்தானத்தே பண்ணிடுவே.

ஆபத்:—பத்மகிரீச ஐயர் என்ன சொன்னார் ருக்மணி?

ருக்ம;—கலியாணத்திற்கு பந்தலெல்லாம் பெரிசா போட்டுண்டு இருக்காளாம் ஏற்பாடெல்லாம் ஆய்ட்டிருக்காம் பங்கஜத்திற்கு ஒரு செட்டி 6000 ரூபா நிலம் தானம் கொடுத்திருக்கானும், நாளை மறுநாள் வருவார் அவரே இங்கே. ஸ்தானத்தைப் பண்ணிட்டு வந்து சொல்ரேன்.

ஆபத்:—சரி நீ போ, நானும் இந்தக் கோமுட்டி வீட்டு. வரைக்கும் போயிட்டு வரவேண்டி இருக்கு, நாளைக்கு ஸ்ரார்த்தமாம் அவன் பெண்டாட்டிக்கு. உங்க மாமிக்குக்கூட நல்ல புடவை ரவிக்கைகள் எல்லாம் கிடைக்கப் போரது.

ருக்ம:—மாட்டுப் பெண்ணுக்கு ஆசீர்வாதம் பண்ரத்துக்கு உதவட்டுமே. (போகிருள்.)

ஆபத்:—நாளைக்கு 21 பிராம்ஹளுக்கு கோதானம் பண்ணப்போரான் செட்டி.

ஜான;—தக்ஷிணை என்ன இருக்கும் ஒவ்வொர்த்தருக்கும்?

ஆபத்:—அவ்வஞ்சி ரூபாயிக்குக் குறையாது.

ஜான:—எல்லாம் உம் வழியாகத்தானே ஏற்பாடு?

ஆபத்:—ஆமாம். ஆளொண்ணுக்கு வர்ர வரும்படியிலே பாதி நமக்குக் கொடுத்துடும்படியாய்ப் பேச்சு.

ஜான:—பசுவுக்கெல்லாம்.

ஆபத்:—கிரயம் போட்டு பாதி வாங்கிடணும்.

ஜான:—யாரோ வாசல்லே கூப்ட்ராபோலே இருக்கே.

ஆபத்:—(எட்டிப்பார்த்து) செட்டியார் அவாள் வரணும், வரணும். (செட்டியார் உள்ளே வருகிறார்) இவாள் தான் எர்ரபாலு செட்டியார் ஜானகி.

ஜான:—(செட்டியாரைப் பார்த்து)இப்போத்தான் பேசிண்டிருக்கோம். நாளை காலமே போயிடறோம் செட்டியார் ஆத்துக்கிண்ணு. எங்கெ இவ்வளதூரம் வந்துட்டேள்?

எர்ரா:—ஒண்ணுமில்லே சாமி, நாளை விசேஷத்தைப் பத்திதான் வந்தேன். இன்னி காலமே வருவிங்கோ என்னு பாத்தேன். காணோம்.

ஆபத்:—இந்தப் பிராம்மணா, 21 பேருக்குச் சொல்லணுமோ அன்னா; அந்த வேலையாய்ப் போய்விட்டேன். இதற்காக செட்டியாரவாள் ஏன் வரணம் இவ்வளவுதூரம்; ஒருதடவை சொல்லியாச்சோ அன்னோ தாங்கள். பிற்பாடு அதற்கு வேண்டியவைகளெல்லாம் ஏற்பாடு செய்துண்டு வந்துடவேண்டியது என் கடமை.

எர்ரா:—இப்போ இந்த ஜஸ்டிஸ்கக்ஷி இருக்குது பாருங்கோ சாமி. அதெலே இந்த பிராம்மணாளுக்கெல்லாம் ஒண்ணும் கொடுக்கக்கூடாது, அவாளே வெச்சி ஒண்ணு நடத்தக்கூடாதெண்ணு தொந்திரவு பண்ராங்கோ.

ஆனல் சாஸ்திரப்படி செய்திடணு மின்னு எனக்கு ஆசை. இதனுலேயே பிராம்ணுளுக்கு தானம் பண்ணப்போர விஷயமெல்லாம் ரொம்பபேருக்கு நான் சொல்லலே. நீங்கள் இதை வெளியிலே பிரஸ்தாபப் படுத்தாதிங்கோ சாமி.

ஆபத்:—சொல்லுவனு இன்னு. இந்த ஜஸ்டிஸ் கட்சி ரொம்ப நாளைக்கு வாழும் இன்னு நினைக்கிறீர். கெட்டுபோர்த்துக்கு காலம் வந்துதான் சாஸ்திரங்களுக்கு விரோதமா யெல்லாம் இப்போ சொல்லிண்டு வரா.

எர்ரா:—சரி. நான் போயிட்டு வரட்டுமா சாமி.

ஆபத்:—கொஞ்சம் தாகசாந்தி பண்ணிண்டு போகலாமே, காப்பி போட்டிருக்கு.

எர்ரா:—(சந்தோஷத்துடன்) என்னத்துக்கு சாமி.

ஆபத்:—கொஞ்சம், ஜானகி இந்தா ஒரு எலை எடுத்துண்டு வா. உட்காருங்கோ செட்டியாரவாள்.

எர்ரா:—கை கால் கழிவிக்கினும் சாமி.

ஆபத்:—இதோ! இதோ இருக்கு பாருங்கோ கால்வாய் அலம்பிண்டு வந்துடலாம்! (செட்டியார் போகிறார்) டீ! ஜானகி, ஓர்த்தருக்கு ஆகும்படியா கொஞ்சம் பொங்கல், புளியோரை, தேன்குழல், இத்தே எடுத்து எலைலே வைச்சுட்ரீ, ஒரு எலையா கொண்டா. இப்படி போடு (ஜானகி உள்ளோடி இலையையும் கையில் சொம்பும் கொண்டு வருகிருள்) ஐயர் இலையில் ஜலம் தெளித்துத் தெரு நடையில் போடுகிருர். (செட்டியார் வருகிருர்) செட்டியாரவாள் இப்படியே உட்காரலாம்; (செட்டி

யார் உட்காருகிறார் இலையில் பொங்கலை எடுத்துக் கொண்டுவந்து பொத்தென்று செட்டியார் இலையில் கொட்டிவிட்டு இலையை எறிந்துவிட்டு கையைக்கழுவிக் கொள்ளுகிறாள்) (செட்டியார் சாப்பிடுகிறார் பின்பு தொகையல் கரண்டியில் கொண்டுவந்து போடுகிறாள். போதுமென்று சொன்னவுடன் மிச்சத்தை வெளியில் கொட்டிவிட்டு கரண்டியை அலம்பி உள்ளே எடுத்து கொண்டு போகிறாள். பின்பு புளியோரை கொண்டு வருகிறாள். கொஞ்சம் போட்டதும் போதுமென்று சொல்ல மீதியை அப்படியே வெளியே எறிந்துவிட்டு கையை அலம்பிக்கொள்ளுகிறாள். தேன்குழலும் அப் படியே. பின்பு காப்பியை ஒரு டம்ளரில் கொண்டு வந்து வைத்து விடுகிறாள். சாப்பிட்டதும் இலையைச் செட்டியார் எடுத்துவிடுகிறார். அவ்விடத்தில் ஒரு மொத்தை சாணிபோட அதைச் செட்டியார் தேய்க் கிறார். டம்ளரைக் கவிழ்க்கச் சொல்லி செட்டியார் எதி ரிலேயே சாணி கரைத்து அதன்மேல் விட்டு வைக்கி றாள். இடை இடையே "இன்னும் கொஞ்சம் போட் டுக்கொள்கிறீர்களா?" "போதும் போதும் சாமி" என்ற சொற்கள் வழங்கப் பெறுகின்றன. எல்லாம் முடிந்தது.

செட்டி:—ரொம்ப கஷ்டங் கொடுத்துட்டேன். போய்ட்டு வரேன் சாமி.

ஆபத்:—இதென்ன சிரமம் தங்களுக்குச் செய்யாமே யாருக்குச் செய்யப் போரோம். தங்களாலேதான் உலகத்தில் தர்மம் என்ற பதம் இருக்கிறது. (செட்டி சிரிக்கிறார்) நம்ப பையனுக்கு இன்னும் 10, 15, நாள் ளே கல்யாணம் வர்ரது இன்னு தங்களண்டை அன்

ஊக்கே சொல்லி இருக்கேன் ஏதாவது தயவுபண்ணு உதவியாய் இருக்கும். ஏதோ ஏழைப் பிராம்ணுள். தங்களைப் போலவாளைக் கேட்டுத்தான், நாங்கள் பிழைக்கவேண்டி இருக்கு.

சேட்டி:—சரி நாளைக்கு திவசம் ஆகட்டும் சாமி பின்னாலே பார்க்கலாம்.

ஆபத்:—தயவு இருக்கனும்.

சேட்டி:—அதற்கென்ன. நான் போய்விட்டு வரேன்சாமி.

ஆபத்:—செய்யுங்கோ.

ஜானகி:—ஏழைப் பிராம்மணு மேலே கவனம் வைக்கணும்.

சேட்டி:—நல்லதம்மா (போகிறார்.) (ஐயரும் அம்மாளும் கூடவே போய் வழி விடுகிறார்கள்.)

எட்டாம் களம் முற்றிற்று.

களம் 9.

பாத்திரங்கள்:-

இராமாநுஜ ஆச்சாரியார்—தலைமை ஆசிரியர் (Headmaster.)

பார்த்தசாரதி ஐயங்கார்
ஜெயராம சாஸ்திரி
ராமபத்திர அய்யர் } பாடசாலை ஆசிரியர்.

சீனிவாசன்
பஞ்சாபிகேசன் } பார்ப்பனச் சிறுவர்கள்.

காலம்—9-30மணி.

இடம்—பாடசாலை ஆசிரியர் அறை.

(ஆசிரியர் நால்வரும் உட்கார்ந்து பேசுகிறார்கள்.)

இராமாநு:—நேற்றென்ன இந்த ராமசாமி நாய்க்கன் கூட்டம்போலிருக்கே.

பார்த்த:—அதுதான் சூத்திராளெல்லாம் கூட்டம் கூட்டமா போயிண்டிருந்தா.

ஜய:—பிராம்மணாளை வையரத்துக்கு இன்னேதான் புறப்பட்டுஇருக்கான்களே.

186225

ராம:—நம்ம சூத்திர பசங்க எல்லாங்கூட போயிருந்துதே தெரியாதா ஒங்களுக்கு.

R34
180

இராமா:—யார், யார், சொல்லுங்கோ.

ராம:—யாரா? அப்துல்லா, ராபர்ட், கணேசன், ஷண்முகம், ஆறுமுகம், முத்தன் இவா ஆறுபேரைத்தான் நான் பார்த்தேன்.

பார்த்த:—இந்தப் பையன்களை இங்கேயே கூப்பிடச்சொன்னாக்கே நல்லா உதைக்கலாமே. அவா அவா கிளாஸ் பசங்களை அவா அவா நன்னான்னா நசுக்கணம்.

ஜய:—நான் இந்த சூத்திரப் பையன்களை வெறும்மே விடரதே இல்லையே. நேத்தைய கூட்டத்தைப்பற்றி கூட பையன்களண்டைச் சொல்லி போரவாளைப் பிச்சி வாரிடுவேன் இன்னுதான் சொல்லியிருந்தேன். இப்போ சொன்ன பையன்களில் என் கிளாஸ் பையன் ஒருத்தனும் இல்லையே.

இராமாநு:—ஆமாம். இந்தச் சூத்திர பசங்களைச் சும்மா விட்டிடப்படாது. கசக்கிண்டேதான் இருக்கணம். முண்டங்கள் என்ன படிச்சாலும் பிராம்மண பிள்ளைகளுக்கு ஈடாவான்களா இன்னா.

பார்த்த:—அதெப்படி முடியும். பிராம்மண மூளை வேறே தான்.

ராம:—மூளையிருக்கோ, இல்லையோ, எங்கிளாஸ் சூத்திரப் பசங்களை நான் எப்பவும் அடிக்கித்தான் வைச்சிண்டிருக்கிருக்கேன். ஒன்னு ரெண்டு இருக்கு கட்டிக் காரப் பசங்கள். இருந்தாலும் ஒவ்வொருபாடத்திலும் உயர்ந்த மார்க்கெல்லாம் நம்மபசங்களுக்குத்தான் கொடுத்துட்ராது நான்.

ஜய:—அப்படிதான் செய்யணும். எந்தப் பிராம்மண வாத்தியாருக்கு இந்த சங்கதி தெரியாது.

இராமநு;—இதென்ன புதுசா என்ன?

பார்த்த:—பிராம்மண பிள்ளைகளுக்கெல்லாம் உயர்ந்த மார்க்குக் கொடுத்து பின்னாலேதான் இந்தச் சூத்திரப் பசங்களுக்கு கொடுப்பது என் வழக்கம்.

ராம:—இல்லாவிட்டால் சூத்திரப் பசங்கள் கைக்கு அடங்குமா என்ன? இப்படி குட்டி குட்டிதான் வைச்சிண்டிருக்க வேண்டியிருக்கு.

ஜய:—நான் நன்னுன்ன சொல்லுவேன் கிளாஸிலேயே. "இந்தச் சூத்திரப்பசங்களுக்கு மூளை இன்னதே கிடையாது என்னப் படிச்சாலும் ஏறப்போரது இல்லே. விட்டுத்தொலேங்கிளண்டா படிப்பை, ஏதாவது கைத்தொழில் பண்ரதுதானே. ஏண்டா எங்க மாறை ஒடக்கிரங்கோ, என்ன படிச்சாலும் பிராமணாளைப்போல ஆகமுடியாது. கருப்பு நாயை என்ன கழுவினாலும் வெள்ளை நாயாகாது" என்று அடிக்கடி நான் சொல்லிண்டேதான் இருப்பேன்.

இராமாநு:—ஆமாம். அப்படிதான் சொல்லணும். அந்தப் பசங்களுக்கு "நமக்கு மூளையில்லே. படிப்பு ஏராது. பள்ளிக் கூடத்தை விட்டுவிட்டுப் போய்விடலாம்" என்னு தோன்றிடவேண்டாமா?

பார்த்த:—இந்தச் சூத்திரப் பசங்களைத் தலை எடுக்க ஒட்டாது அடிச்சிண்டேதான் வரணும்.

ராம:—இந்தப் பசங்கப் பேரே குறிச்சிண்டீளோ அன்னே? கண்டிப்பாய் இவாள் ஒர்த்தருக்கும் பாஸ் போடவே கூடாது.

ஜய:—மற்றச் சூத்திரப் பசங்களையும் எவ்வளவு தூரம் வடிக் கட்டணுமோ அவ்வளவு தூரம் கட்டிண்டு வரணும்.

இராமாநு:—டே சீனிவாசா!

சீனி:—சார்! (ஓடிவருகிறன்)

பார்த்:—அங்கே அப்துல்லா, லாபர்ட், கணேசன், ஷண் முகம் இவா இருக்காளாப் பாரு.

ராம:—ஆறுமுகன், முத்தன் இவாளையும்கூடக் கூப்பிட்ரா.

(சீனிவாசன் ஓடுகிறன்)

ஜய:—அதோடே ஜஸ்டிஸ், திராவிடன், குடியரசு, இந்தப் பீடைகளைப் படிக்கவொட்டாமல் பசங்களைத் திட்டம் செய்து வரணும்.

இராமாநு:—ஆமாம். ஒவ்வொரு வாத்தியாரும் தங்கள் கிளாஸ் பாடத்தோடு பாடமாக இத்தெ சொல்லிண்டு வரவேண்டியது அத்தியாவசியமாச்சே.

பார்த்:—சுதேசமித்திரனைப் படிச்சா நல்லபுத்தி உண்டாகும் இந்தப் பசங்களுக்கு.

ராம:— ஒவ்வொரு கிளாஸிலும் "சுதேசமித்திரனைப் படிச்சால் நல்ல தமிழ் விருத்தியாகும். அறிவு வளரும்" இன்னு சொல்லிண்டுதான் வரேன் நான்.

(பஞ்சாபி இராமாநுஜாசாரியிடம் ஒரு கடிதம் கொண்டுவந்து கொடுக்கிருன்.)

இராமாநு:—ஓ! ஓங்கண்ணனுக்கு கலியாணமா? அதற்கு என்னத்துக்கு 10நாள் லீவு? 2, 3 நாள் போதாதா?

பார்த்த:—எந்த ஊரிலே?

பஞ்சாபி:—ராகு மண்டபத்தில் சார்.

ராம:—ரொம்ப தூரம்போலிருக்கு இங்கிருந்து. 10நாள் வேண்டாமா சார் போயிட்டுவர.

ஜய:—பெண் அந்த ஊர் தானு?

பஞ்சாபி:—ஆமாம் சார்.

பார்த்:—பெண் பேரென்ன?

பஞ்சாபி:—பங்கஜம் சார்.

ராம:—என்ன வரதக்ஷணை?

பஞ்சாபி:—2000-ம் சார்.

ஜய:—பலந்தான், பி. ஏ. பாஸ் பண்ணிடானே அன்னே உங்க அண்ணன்.

பஞ்சாபி:—ஆமாம் சார்.

இராமாநு:—சரி நாளையிலிருந்துதானே லீவு. நீ கிளாஸுக்கு போடா. (மணி அடிக்கிறது) இந்தப் பசங்களைக் காணும். கிளாஸிலே ஒவ்வொருத்தரும் கண்டியுங்கள் வெறும்மெ விடப்படாது.

ஒன்பதாம் களம் முற்றிற்று.

களம் 10.

பாத்திரங்கள்:-

பிராமணர்கள்

தங்கவேலு ஆச்சாரி.

காலம்—பகல் 12-30 மணி.

இடம்—பத்தமகிரீச அப்பர் வீடு.

(திரைக்கு உள்ளேயே தொப்பு திப்பு என்ற சத்தமும், "வல்லார ஒழிப்பிள்ளை, தடியாம்பிள்ளை, ஆசாரித் தாழி மகன், கம்மாளத் தாழிஒழி, வாய்மேல் உதை வயித்தைப்பார்த்து உதை" என்று பல தவறுன சொற்களைப் பலபேர் கோபத்துடன் கூறுகிறூர்கள். "ஐயோ! ஐயோ" வென்று ஆச்சாரி வெளியே ஒடிவருகிறுர். பார்ப்பனர் தொடர்ந்துவந்து மடக்கிமடக்கி அடிக்கின்றனர். புரட்டிப் புரட்டி உதைக்கின்றனர். ஆச்சாரி "பசி சாமி சாப்பிட்டு ரெண்டுநாள் ஆகிறது சாமி" என்று கத்திக்கத்தி கடைசியாகத் தப்பித்துக்கொண்டு ஒடிவிடுகிறுர். ஒரு பிராமணர் துரத்தி ஓடுகிறுர்.)

பத்ம:—இந்தச் சூத்திர பையலுக்கு என்ன தைரியமின்னா து பிராமணுள் கலியாண பந்தியிலேவந்து உட்காரத்துக்கு.

மற்றெரு பார்ப்பனர்:—தைபிரியமா? பிச்சிப் பிச்சின்னு எடுத்துட்டு இருக்கணும். தப்பிச்சிக்கிண்டு ஓடிட்டுதே!

கைலா: —வயிற்றெ கிழிச்சிட்டன்னே விட்டிருக்கணும் அவனை; கலியாணச் சாப்பாட்டை நிரப்பவந்தவபிற்றை.

இன்னெரு பிராமணர்:—ருசி ஆசைகொண்டு தின்னவந்த நாக்கை அறுத்தன்னே அனுப்பிச்சி இருக்கணும்.

மற்ருே:—இனிமே திரும்பி இம்மாதிரி வரவொட்டாமெ காலேயன்னே முறிச்சிட்டிருக்கணும்.

மற்ருே:—நம்ம போஜனத்தை பார்த்த அந்தக் கம்மாளக் கண்ணேத் தோண்டி யெடுத்தன்னே மறுவேலே பார்த்திருக்கணும்.

மற்ருே:—பசியாம், பசி! வல்லாராலழிப் பெத்ததது க்கு பசியாம்.

இங்கிலீஷ் படித்த பிரா:—பாவம் என்ன சேயாது இரண்டு நாளாய்ச் சாப்பிடலேயாம்.

மற்ருே:—இத்தான், இந்த நீச்சப்படிப்பினுடைய பிரயோஜனம், சாப்பிட்டு ரெண்டுநாளானக்கே பிராம்மண போஜனத்திலே வந்து உட்கார்ந்துட்ராதா! நன்ருரிக்கு நீர் சொல்ராது.

உள்ளிருந்து இன்னெரு பிராமணர் வந்து;—சரி கடக்காது; ஸ்நானத்தைப் பண்ணிட்டு வந்து தொலேயுங்கோ முதல் பந்தி எழுந்திருக்கப் போரது.

வேருெரு பிராமணர்:—பங்கஜம் கலியாண சாப்பாட்டை என்னைக்கும் மறக்காதபடி பண்ணிட்டா இந்தக் கம்மாளப் பயல். (எல்லோரும் சிரித்துக்கொண்டே போகிருர்கள்)

பத்தாம் களம் முற்றிற்று.

களம் 11.

பாத்திரங்கள்:—

சத்தியகீர்த்தி அய்யர்

ஆபத்தாரண அய்யர்

இன்னும் பல பார்ப்பனர்

நாட்டுக்கோட்டை செட்டி—சத்திரச் சொந்தக்காரர்.

காலம்:—இரவு 10 மணி

இடம்:—வடதில்லை பிராம்மண அன்னசத்திரத்தின் திண்ணை. (சத்திரத்தினுள்ளே வயிறு புடைக்க உண்டு கையில் விசிறியோடு சத்தியகீர்த்தி அய்யர், அவரைச்சூழ்ந்து ஒவ்வொருவர் ஒவ்வொரு விசிறியோடு ஆபத்தாரண அய்யர் இன்னும் பல பார்ப்பனர் வருகின்றனர். ஏப்பம்பலம். வயிற்றைத் தடவல்அதிகம். திண்ணைமீது உட்காருகிறார்கள்)

சத்திய:—இன்னும் யாரானும் சாப்பிடவேண்டியவா இருக்காளா என்ன?

ஒரு பார்ப்:—இல்லை, எல்லாரும் ஆய்ட்டதே.

சத்திய:—அப்போ, பரிசாரகாளுக்குத் தனியாக வேண்டுமானுக்கே எடுத்து வைச்சிண்டு, நம்மகூட பிரசங்கஞ் செய்ய வந்திருக்கும் சூத்திரா ஒரு ஐந்து பேருக்கு கொஞ்சம் அனுப்பிச்சூட்ரிளா, காத்திண்டிருப்பா, மணி 10க்கு மேலே ஆராப்பலிருக்கே.

ஒரு பார்ப்:—பரிசாரகாளெல்லாம் நாம் சாப்பிட்ரத்துக்கு முன்னேயே அவாளுக்கு வேண்டியதைத் தனியாக எடுத்து வைச்சிண்டிருப்பா, ஆகவே பரிசாரகாளைப் பத்தி கவலே இல்லே. இதோ அந்த அஞ்சி சூத்ரா ளுக்கு அனுப்பிச்சி வைச்சிட்ரேன். தெற்கு வீதி யிலேதான் இறங்கி இருக்கா அவா.

சத்திய:—ஆமாம், கொஞ்சம் சீக்கிரம் போங்கொ.

(எல்லோருக்கும்சந்தணம் கொடுக்கப்பெறுகிறது. பூசுகிறுர்கள். வெற்றிலேப்பாக்கு தட்டு வருகிறது)

ஒரு பார்ப்·—செட்டியார் வாரப்போல இருக்கு.

சத்திய:—யாரு: இந்தச் சத்திர செட்டியா?

ஒரு பார்ப்:—ஆமாம், (செட்டியார் வந்துவிட்டார்)

சத்திய:—வாங்கோ செட்டியார் அவாள்! தங்கள் கைங்கர் யம் தான், இன்னைக்கு ரொம்ப சுகமான போஜனம். நான் இதுவரைக்கும் சாப்பிட்டதிலே, தங்கள் அன்ன சாலே போஜனத்தைப்போல அருமையானது வேறு இடங்களில் கண்டதில்லே.

செட்டி:—ஏதோ நடக்குச் சாமி எளவு.

சத்திய:—ரொம்ப சுகம், பெரும் புண்ணியம், பணம் படைச்சவாளுக்கெல்லாம் இப்பேர்ப்பட்ட புண்ணி யம்வாய்க்குமா இன்னு? அன்னதானம் எல்லாதானத் திற்கும் சிறந்தது இன்னு சாஸ்திரங்களெல்லாம் சொல் றது. அதிலும் பிராம்மணுளுக்கு சேய்ரது ரொம்ப சிரேஷ்டமாச்சே. மத்த சத்திரங்களிலே இவ்வளோ விசேஷமா நடக்கிரதா தெரியல்லே இன்னைய போஜ னம் எலே ஒன்னுக்கு ரெண்டு ரூபாய்க்குமேலே ஆகும் போலிருக்கே.

செட்டி:-(சந்தோஷத்துடன்) ஏதோ நடக்குச் சாமி எளவு

சத்திய:—எங்கே இன்னோரத்துக்கு மேலே இப்படி வந்துட்டேள்.

செட்டி:—எளவு, நம்ம குமாஸ்தா எல்லாஞ் சரியா கவனிச்சாரோ இல்லேயோ இன்னு, பார்க்கலாமின்னுத்தான் இப்படி வந்தேஞ் சாமி.

சத்திய:—எல்லாம் ரொம்ப சுகமா நடந்து போச்சு, தங்களுக்குத்தான் வீண் சிரமம், வந்திருக்க வேண்டிய அவசியமில்லே.

செட்டி:-இருக்கட்டுஞ் சாமி, காலமெ நம்ப சமஸ்கிருத பாடசாலெயெ பார்க்க வாட்டுமே சாமி யெல்லாம்.

சத்திய:—ஆ! ஆ! ரொம்ப சந்தோஷம், அவசியம் பார்க்க வேண்டியதுதான், தங்களேப்போன்ற தரும பிரபுக்களாலேதான் நம்ம பாஷை, நம் மதம், நம்ம நாடு எல்லாம் முன்னேற்ற மடையவேண்டி யிருக்கு.

ஒரு பார்ப்:—ஸ்ரீ நடராஜாவுக்கும் வெள்ளி ரதம் பண்ணி வைச்சப் பெரியவா இவாள்தான்.

சத்திய:—ஓ! அப்படியா, ரொம்ப புண்ணியம்.

செட்டி:—(சந்தோஷத்துடன்) ஏதோ நடக்குச் சாமி எளவு

சத்திய:—தங்கள் செல்வத்துக்கு இன்னும் நூறு சமஸ்கிருத பாடசாலேகள் வைக்கலாம்; நூறு வெள்ளித் தேர்கள் செய்யலாம். அடுத்தப்படி எந்த ஊரில் சமஸ்கிருத பாடசாலே வைக்க யோசிச்சிண்டிருக்கேள், ஒவ்வொரு ஜில்லாவுக்கு ஒவ்வொரு பாடசாலேயாவது ஏற்படுத்தி விடலாம். சமஸ்கிருதத்திலேதானே நம்ம

சாஸ்திரங்கள் எல்லாம் இருக்கு, நம்ம நாடு முன்னேற்றத்துக்கு சமஸ்கிருதந்தான் ரொம்ப அவசியம்.

செட்டி:—நம்ம நாட்டுக்கு இந்திதான் அவசியமின்னு சொல்றாங்களேச் சாமி, நம்ம தாதகோபாலாச்சாரி நம்மண்டே வந்து இந்தி வளர்ச்சிக்கு இன்னு சொல்லி பத்தாயிரம் ரூபா வாங்கிக்கிண்டு போனாரே.

சத்திய:—இந்தியும் இருக்கவேண்டியதுதான், செட்டியார் அவாள். அது ராஜாங்க பொது பாஷையாயிருக்கணும். சமஸ்கிருதம் நம்மறிவு நாகரிக வளர்ச்சிக்கு வேண்டிய சாஸ்திரங்களைப் படிப்பதற்கு அவசியமான பாஷையாயிருக்கணும்.

செட்டி:—ஓ, ஓ, சரிதான்.

சத்திய:—நாழிகையாரது, அப்போ நாளை காலமே பார்க்கலாம்.

செட்டி:--நாளைக்குகூட பிரசங்க மிருக்குதாச்சாமி, ரொம்ப நன்னா இருந்தது இன்னைக்கு.

சத்திய:—நாளை மத்தியானமே போகலாமின்னு யோசனை, செட்டியார் அவாள் உத்திரவு பண்ணுக்கே நாளை சாயங்காலம் கூட ஒரு கூட்டம் வைச்சிண்டா போச்சு. நாட்டுக்கு உழைக்காத்துக்கு இன்னேதானே புறப்பட்டு இருக்கோம்.

செட்டி:—நாளை இருந்து போகட்டுஞ்சாமி

சத்திய:—நல்லது.

செட்டி:—போயிட்டுவாரேஞ் சாமி.

சத்திய:—செய்யுங்கோ செட்டியார் அவாள் ரொம்ப சிரமம். மஹா புண்ணிய புருஷர். (செட்டியார் போகிறார்).
(வெற்றிலை பாக்கு போட்டுக்கொள்கிறார்கள்)

ஒரு பார்ப்:—தாங்கள் சொன்னபடியே அய்ந்துபேருக்கு ஆம்படி எல்லாம் அனுப்பி வைச்சுட்டேன்.

சத்திய:—நல்லது.

ஆபத்:—ஆமாம் இந்தச் சூத்திராளை ஏன் இத்தனைபேரை இழுத்துண்டு திரியரீள் நன்னு பிரசங்கம் சேயரத்துக்கு பிராம்மணுத்தானு அகப்படலே.

சத்திய:—உங்களுக்குத் தெரியாது சாஸ்திரிகளே; இந்தச் சூத்திராளைப் பிடிச்சுண்டு வர்ரது ரொம்ப காரியமாத் தான்.

ஆபத்:—இதிலென்ன காரியமிருக்கு, அவா ஆசாரத்துக்கும் நம்ம ஆசாரத்துக்கும் ஏத்தத்துக்கும் கிணத்துக்குமா இருக்கே, அவாளை கூடவே அழைச்சிண்டு போயிண்டு இருக்கிறதின்னு கஷ்டமான்னே முடியும்.

சத்திய:—உங்களுக்கு விஷயம் தெரியாது சாஸ்திரிகளே. சொல்ரேன் கேளுங்கொ இதின் மர்மத்தை. இந்தக் காலத்திலே சூத்திராள் எல்லாம் ஒரு பெரிய கட்சி ஏற்படுத்திண்டு இருக்கா தெரியுமோ அன்னே.

ஆபத்:—ஆமாம், ஏதோ ஜஸ்டிஸ்கட்சி, சுயமரியாதைக்கட்சி இன்னு சொல்ராளே, அத்தையா சொல்ரீள்.

சத்திய:—ஆமாம், ஆமாம் இந்தக் கட்சிக்காரர் எல்லாம் பிராம்மணு செய்யும் கொடுமைகளைக் கண்டிச்சி, பிராம் மணுளை இருக்கிற இடமே தெரியாமெ செய்யணு மின்னு பார்க்கிரா. ஈரோடு ராமசாமிநாய்க்கன் இன்னு ஒருத்தன் புறப்பட்டிருக்கான் தெரியுமோ அன்னே அவன் மற்ற சூத்திராளையும் சேர்த்துவைச்சிண்டு நம்ம புரட்டுகளை எல்லாம் வெட்ட வெளிச்சமாய் திட்ரூன்.

ஆபத்:—(கோபத்துடன்) பிராம்மணு என்னக் கொடுமை செய்ரோம் சூத்திராளுக்கு, இன்னு புரட்டு இருக்கு நம்மண்டை.

சத்திய:—அந்தக் கேள்வியைக் கேழ்க்காதீம், சூத்திரன் பிறந்தது முதல் செத்துப்போாவரை, என் அதற்குப் பின்ஞலே இரண்டு தலைமுறை வரைகூட, பிராம்மணனுக்கு அடிமையாகத்தானே ஆக்கப்பட்டிருக்கிறுன். எதற்கெடுத்தாலும் பிராம்மணன்தான்போய் தக்ஷிணை வாங்கிண்டு நடத்தவேண்டி யிருக்கு.

ஆபத்:—இதெல்லாம் நாமா பண்ணிண்டதா இன்னு வேத சாஸ்திரங்களிலே கடவுளே ஏற்படுத்தினது தானே.

சத்திய:—அதெல்லாம் பழைய கதை சாஸ்திரிகளே. சாஸ்திரங்களெல்லாம் நம்மவா சௌகர்யத்துக்காகவே நம்மவாளே கடவுள் பேரைச்சொல்லி எழுதிவைச்சவை தானே.

ஆபத்:—(திடுக்கிட்டு) என்ன அனியாயமாய் இருக்கே!

சத்திய:— சாஸ்திரிகளே ஆச்சரியப்படாதீர், சாஸ்திரம், சாஸ்திரம் என்னு சொல்ர ஒவ்வொண்ணையும் ஆராய்ஞ்சி பார்த்தாக்கே எல்லாம் நம்ம சுகத்துக்கே, மற்றவாள் எல்லாம் நம்ம சுகத்துக்கு உழைக்கவே, நமக்கு அடிமையாகிக் கிடக்கவே, வெகு தந்திரமாக, நம்மவாளே எழுதியிருக்காள் என்பது நன்னுத்தெரியும், இதுவுமல்லாமே கவர்ன்மென்ட் உத்தியோகத் துறையிலேயும் நம்மவா ஏராளமா நுழைஞ்சிண்டு இருக்கா. இதுவும் சூத்திராளுக்கு ஒரு பெரிய குறை தானே.

ஆபத்:—அதனுலேத்தான் இப்போ சூத்திராளை அழைச்சிண்டு வந்திருக்கிளா? சூத்திராளை நீங்களே கெடுத்து விடுவீள்போலிருக்கே. நன்னூரிக்கே! இப்பேர்ப்பட்ட துரோகிகளை கிட்டே சேக்கலாமா.

சத்திய:—சொல்ரதைக் கேளும் சாஸ்திரிகளே, இப்படி இந்தச் சூத்திரா கண்ணைத் திறந்தூட்ட பிற்பாடு நாமா ஏதாவது வழி தேடாட்டாக்கே, காமனைப் பரமசிவன் எறிச்சாப்போல் எறிச்சி சாம்பலாக்கியன்னோ விடுவா நம்மை.

ஆபத்:—அதற்குச் சூத்திராளை கூடவே வைச்சிண்டு இருக்கிறது எப்படி வழியாகும் இன்றீள்.

சத்திய:—பொறுங்கள் சாஸ்திரிகளே, யானையைப் பிடிக்க யானையையே விடுவா தெரியுமா உமக்கு.

ஆபத்:—ஆமாம், சொல்லும்.

சத்திய:—அதைப்போல இந்தச் சூத்திரா இப்படிக் கிளம்பி இருக்கரதே, அழிக்கிரத்துக்குச் சூத்திராளையே தான்விடணும். நம்ம தென் இந்தியாவைப்பற்றி மாத்திரம் பேசுவோம். நூற்றுக்கு தொண்ணூறு பேருக்கு மேல் சூத்திரள் இருக்கா. இவாளுடைய உதவி இருந்தாத்தான் இந்த சூத்திரா கக்ஷி பலக்கும். ஆனுல் இவாள்ளே பாதிபேரையாவது நாம் நம்ப வழிக்குத் திருப்பிட்டுமானுக்கே சூத்திரா கக்ஷிக்குப் பலமில்லாமலே போய்டுமோ அன்னோ? பின்னே நமக்கு அவா ஒன்னும் கெடுதி சேயாத்துக்கு இல்லாமெ போய்விடுமோ அன்னோ? சூத்திராள் நம்ம கொடுமைகளைச் சூத்திர ஜனங்களுக்கு எடுத்துச் சொல்லி உண்மையை

விளக்கச்சே நாம் போய் "அவா சொல்ரதே கேட்கா திங்கோ" சொன்னுக்கே சூத்திர ஜனம் கேட்குமா சொல்லும் சாஸ்திரிகளே!

ஆபத்:—ஓ! ஓ! அதக்குத்தான் சூத்திரானைக் கொண்டே சூத்திராளுக்குச் சொல்லி அவாளை நம்ம சாஸ்திர வழிக்கு திருப்பப் பார்க்கிறீளா?

சத்திய:—ஆமாம் சாஸ்திரிகளே, இப்போது தெரிஞ்சுதா உமக்கு? ஒவ்வொரு ஜாதியானையும் அடக்கி நம்ம வழிக்கு இழுக்கிரத்துக்கின்னே பல ஜாதியிலிருந்தும் ஆட்களைப்பிடிச்சி கையிலேயே வைச்சிண்டிருக்கோம். இன்னிக்கி என்னோட வந்தவா யார் யாருன்னு தெரியுமா உமக்கு? இதிலே கிருஸ்துவன், துலுக்கன். நாயுடு, நாய்க்கர், செட்டி, பிள்ளை எல்லாருமிருக்கா. குலாம் காதர் சாயபு, குழந்தையப்ப முதலியார், பாகவதுலு நாயுடு, பிரம்மதாச செட்டியார், மயிலையடிமை பிள்ளை, மன்னார்சாமி நாய்க்கர்.

ஆபத்:—இவாளெல்லாம் மாத்திரம் நம்மபக்கம் எப்படி சேந்திருக்கா?

சத்திய:—(சிரித்து) பலவிதமா சேந்திருக்கா. சிலதுக்கு மூளையில்லே. எத்தையானும் சொல்லி ஏமாற்றி வைச்சிண்டிருக்கோம். சிலதுக்கு நம்ம சங்கதி தெரிஞ்சாலும் பாவம், புண்ணியம், வேதம், சாஸ்திரம், அது இதென்று நம்பச் சொல்லி, திருப்பி வைச்சிண்டிருக்க வேண்டிருக்கு. இன்னும் சிலரை இன்னும் எப்படி எப்படி எப்படியோ சரிப்படுத்தவேண்டியிருக்கு. இப்படியெல்லாம் வெகு பிரயாசைப்பட்டு பிடிச்சிவர்ர ஆட்களை நீர் "என்னத்துக்கு இவாள்?" என்கிறீர்.

ஆபத்:—இல்லே, இப்போ விஷயம் தெரியாது நன்னு. ஆமாம் சூத்திராளேக் கொண்டுதான் சூத்திராளே அடக்கணும். ரொம்ப அக்ரமாத்தான் போச்சு சூத்ரா அக்ரமம்.

ஆமாம் இந்த சூத்திரப்பசங்க என்ன பேசரா.

சத்திய:—நீங்கள் இன்னிக்கு பிரசங்கத்திற்கு வால்லேயா இன்னு? நாம் என்னென்ன சொல்லச் சொல்ரமோ அத்தையெல்லாம் சொல்ரா.

ஆபத்:—(சிரித்து) அப்படியா! அதிருக்கட்டும் இப்போ நம்மவா கட்சியிலே நம்ம சாஸ்திரங்களேப்பற்றி என்னத்தான் சொல்ரா சொல்லுங்கோ பார்ப்போம்?

சத்திய:—சாஸ்திரங்களேப்பற்றி இப்போ நாம் பேச ஆரம்பிச்சாக்கே மோசமாய்ப்போய்விடும் நம்பநிலே. இத்தெ அறிஞ்சிதான் நம்ம கட்சிக்குத் தலேவாராயிருக்கிற ஸ்ரீமான் பாதர் அய்யங்கார் முதல்கொண்டு, சங்கதி தெரிஞ்ச ஒவ்வொரு பிராம்மணரும் ஜாதி வித்தியாசம் கூடாது, தீண்டாமை கூடாது, சாஸ்திரங்களிலே ஜாதி வித்தியாசம் சொல்ரதெல்லாம் சரியல்ல, மனுஷரா பிறந்த எல்லாரும் ஒண் ணுதான், பெண்களும் ஆண்களேப்போல் சமத்துவமாயிருக்கலாம் இன்னு பலவாறு சொல்ரா. நமக்கு மனசார இதெல்லாம் பிடிக்காட்டானுங்கூட சூத்ராளே நம்ம பட்சம் சேக்ரத்துக்கின்னே இப்படி எல்லாம் சொல்லிக்க வேண்டியிருக்கு.

ஆபத்:—ஆமாம் இப்படி சொல்லிண்டு இருந்துட்டாக்கே நம்மகதி யின்னுரது.

சத்திய:—நீர் பயப்படாதிரும் சாஸ்திரிகளே! எவ்வளவோ முன் யோசனேயோடேதான் நடத்திண்டு போரோம்

நம்ம கட்சியை. சூத்தரா கட்சியின் இடுப்பை உடைச்சி சூத்ராளேக் கலேச்சி விட்டுவிட்டாக்கே பிற்பாடு அவா நாம் சொல்றபடி கேட்டுண்டு கிடப்பா இதற்காகத்தான் தேச நன்மை, தேச நன்மையின்னு தேச நன்மையை முன்னே காட்டி இந்தச் சூத்திரப் பயல்களை ஈடேறவிட்டாமெ பண்ணரத்துக்கு எவ்வளவோ பிரயாசைப்பட்ரோம். பூரண சுதந்தரந்தான் இந்தியாவுக்கு வேண்டியது இன்னு இப்போ மாறடச்சிக்கிறதெல்லாம் எதக்காகத் தெரியுமோ அன்னே? இந்தச் சூத்திரா முன்னேறவொட்டாம அடங்கவும் நாம் சுகமடையரத்துக்குந்தான்.

ஆபத்:—அதெப்படி?

சத்திய:—எப்படி இன்னு கேக்கிறீளா? இதோ சொல்ரேன் பாரும். வெள்ளேக்காரனுக்கு உட்பட்ட சுயராஜ்யம் கொடுத்தா போதுமின்னுகேட்டாக்கே, அந்த சுயராஜ்யத்தை யடையரத்துக்கு முதல்படியா முன்னே மூன்று மந்திரிமாரை ஏற்படுத்தினதைப்போல இப்போ இரண்டாவதுபடியா ஏதாவது கொடுப்பான். அப்படி கொடுத்தா யார் அனுபவிக்கப்போரது? முன்னே கொடுத்ததை யார் அனுபவிக்கிருளோ அவாத்தான் இதையும் அனுபவிப்பா? இதிலே நமக்கென்ன லாபமிருக்கு? நம்ம நிலே இப்போ இருக்கிரத்தே பார்க்கிலும் கஷ்டமான்னு போய்விடும். இப்படியில்லாமெ, விதண்டாவாதமா "பூர்ண சுதந்திரந்தான் வேணும். மற்ற எதுவும் போதாது" இன்னு சண்டை போட்டாக்கே வெள்ளேக்காரனுக்கே வெறுப்பா போயி ஒன்னேயும் குடுக்காமே போவான். வெள்ளக் காரனுக்கு

வெறுப்பு உண்டாக்கி ஒண்ணும் கொடுக்காமெ சேய ரத்துக்கு இன்னேதான், இப்போ நமக்கு சுயராஜ்யம் கொடுக்கலாமாஇன்னு பாத்துண்டுவா சக்ரவர்த்தி அனுப்பி யிருக்கும் சைமன் கமிஷனே பகிஷ்காரஞ் செய்யணுமின்னு இன்னிக்கிக்கூட பிரசங்கம் செய் தோம்.

ஆபத்:—(சந்தோஷத்தோடு) ஆ, ஆ, அப்படியா ரொம்ப யோசனையோடு இன்னுசேயாராப்போல் இருக்கு. நல்லது; அப்போ இப்படியெல்லாம் சூத்ர ஜனங்களுக்குப் பிரசங்கஞ் செய்ரத்துக்கு சூத்ராள்தான் இருக்கணும். ஆமாம். இப்போ தெரியாது நன்னு என் சூத்திராளே அழைச்சிண்டு வந்திருக்கேள் கூட இன்னு.

சத்திய:—(சிரித்து) அப்பா! தெரியாதோ அன்னே? (இன்னொரு பார்ப்பனரைப் பார்த்து) இந்த சாஸ்திரிகள் யார்?

ஒரு பார்ப்பனர்:—இவாள் ஆபத்தாரண அய்யர் என்பவா. இவாள் மகன் பி. ஏ. பாஸ் பண்ணிட்டு கலெக்டர் பரீக்ஷைக்குப் படிக்கச் சீமைக்குப் போயிருக்கான்.

சத்திய:—ஓ, அப்படியா, சந்தோஷம்! போய் எத்தனே நாள் ஆரது.

ஆபத்:—ஒரு வருஷத்துக்கு மேல் ஆரது.

சத்திய:—ஓ, ரொம்ப சந்தோஷம்! நம்மவாளுக்குத்தான் கவர்மென்ட்டிலே சகஜமா வேலே குடுக்கப்படாது இன்னு உத்திரவு போட்டிருக்கா. ஆகவே இப்படித்தான் நம்மவாள் எல்லாம் முன்னுக்கு வரணும். சாஸ்திரிகளே உம்ம பையன் ஒருத்தன் கலெக்

டாரா வந்திட்டாக்கே, நம்மவா எத்தனை பேருக்கு க்ஷேமமாயிருக்கும் தெரியுமா? சந்தோஷம். நாழியா ரது படுத்துக்கொ போவேரமா.

பதினோராம் களம் முற்றிற்று.

களம் 12.

பாத்திரங்கள்:—பங்கஜம்.

A. R. G. Paul I. C. S. (ஆ. ராஜகோபால அய்யர்) பங்கஜம் கணவனும் கலெக்டரும்-ஆபத்தாரண அய்யர் மகனும்.

செல்வராஜ முதலியார் B. A., (Hons):—உத்தியோகத்துக்கு விண்ணப்பஞ் செய்யும் இளைஞர்.

சுதர்சன அய்யர்:—கலெக்டர் குமாஸ்தா.

காலம்:—காலை 9 மணி.

இடம்:—கலெக்டர் பங்களாவில் முன் ஹால்
(சேவகன் ஒருவன் உட்கார்ந்து கொண்டிருக்கிறான் செல்வராஜ முதலியார் வருகிறார்).

சேவகன்:—யார்? (கை, சைகையால் கேட்கிறான்)

செல்வ:—(மெல்ல) துரை இருக்கிறாரா?

சேவ:—(ஹாலுக்கு வெளியே அழைத்துச் சென்று சாதாரண குரலில்) இல்லெ, துரை எங்கேயோ வெளியிலே போயிருக்கார், என்ன சங்கதி?

செல்வ:—பார்க்கணும், எப்போ வருவார்?

சேவ:—தெரியாது.

செல்வ:—ஆபீசுக்குப் பதினொரு மணிக்குப் போகணுமோ இல்லையோ.

சேவ:—போனாலும் போவார், இல்லாவிட்டால் இல்லெ, பேபர்ஸ் வீட்டுக்கு வந்துட்டா சாயங்காலமா பாத்து அனுப்சிடுவாரு. எதற்காகப் பார்க்கணும் சொல்லுங்களேன்.

செல்வ:—கலெக்டர் ஆபீசில் வேலை ஒண்ணு காலியாய் இருக்குண்ணு சொன்னாங்கோ

சேவ:—அதுக்கின்னா சார். அம்மாளைக்கூட பார்க்கலாம். அம்மா இஷ்டப்பட்டுட்டா ஆயிடும். அம்மாளைப் பார்க்கிறது இன்னா, செலவு கொஞ்சம் ஆவும். ஆனாலும் நம்ளவங்களுக்கு வேலை கிடைக்கிறதின்னா கஷ்டந்தான்.

செல்வ:—அம்மா யாரு? பங்கஜந்தானே, அந்தப் பஞ்சாங்கப் பார்ப்பான் பத்மகிரீச ஐயர் பெண்ணு, பஞ்சாங்கம் சொல்லப்போர வீட்டுக்கும் பிச்சை எடுக்கப்போர வீட்டுக்குமெல்லாம் இழுத்துந் திரிஞ்சிக்கினு இருந்தான் இந்தப் பெண்ணை, இப்பொ இன்னாடா இன்னு அது கலெக்டர் பெண்டாட்டியா பூட்டுது. அப்பவே கர்வம் பிடிச்ச பெண்ணுச்சே அது.

சேவ:—ஐயோ, இப்ப அந்த அம்மாதான் கலெக்டர்

செல்வ:—ஆனால் பார்க்கலாமா?

சேவ:—பாருங்கொசார் ஆபீசு விஷய மொத்தமும் அந்தம்மாளேதான் பாக்கிறுங்கோ இன்னு சொல்லலாம்.

பஞ்சாங்கப் பார்ப்பான் பெண்ணுகவா இருக்காங்கோ, இப்போ. பார்த்திங்களானுல் ஆள் அடையாளமே கண்டு பிடிக்க முடியாதே உங்களாலே.

பங்கஜ:—(உள்ளிருந்து) பியூன்! பியூன்!!

சேவ:—(பயந்து செல்வராஜை வெளியே இருக்கச்சொல்லி) அம்மா! (என்று ஓடுகிருன்.)

பங்க:—(ஹாலுக்கு வந்து நாற்காலியில் உட்கார்ந்து விடுகிருள்) என்னடா அங்கே எறைச்சல், யாரோடே பேசிண்டிருந்தே?

சேவ:--ஐயாவைப் பார்க்கிறத்துக்கு யாரோ வந்திருக்கிருங்கோ அம்மா.

பங்க:—யார் அது கேட்டையா?

சேவ:—யாரோ உத்தியோகத்திற்காக வந்தாராம்.

பங்க:—யார் அது, இருக்காரா பாரு-பிராம்மணுளா?

(சேவகன் வெளியே போகிருன்)

சேவ:—(திரும்பி வந்து) வெளியில் இருக்காரம்மா.

பங்க:—கூப்பிடு, (சேவகன் போய் செல்வராஜை அழைத்து வருகிருன். செல்வராஜ் சலாம் செய்து எலுமிச்சம் பழம் கொடுக்கின்றூர். பங்கஜம் வாங்கிக்கொண்டு) உம்ம பேரென்ன?

செல்வ:—செல்வராஜ் அம்மா.

பங்க:—செல்வராஜ் இன்னுக்கே, என்ன கழுதையா, குதிரையா?

செல்வ:—செல்வராஜ முதலியார் அம்மா.

பங்க:—(கோபத்துடன்) ஓ, இங்கே எதுக்காக வந்தீர்?

செல்வ:—ஆபீசில் வேலை ஒன்று காலியாக இருப்பதாகச் சொன்னார்கள்.

பங்க:—காலியுமில்லை, கீலியுமில்லை. சரி அப்ளி:கேஷன் கொண்டுவந்திருக்கிரா?

செல்வ:—கொண்டுவந்திருக்கேன் அம்மா.

பங்க:—சரி; கொடுத்திட்டுப்போம் பார்க்கலாம்?
(அப்ளிகேஷனைக் கொடுக்கச்சொல்லி வாங்கி வைத்துக்கொள்கிருள்.) என்ன பாஸ் பண்ணிருக்கிறீர்?

செல்வ:—பி. ஏ., (ஹானர்ஸ்) அம்மா.

பங்க:—நீர் ஏதாவது கைத்தொழில் பார்க்கப்படாதா? சரி! போம்! (செல்வராஜ் போகிருர்.)

(தனியே) இந்தச் சூத்ரப் பயலுகளுக்கெல்லாம் வேலை கொடுக்கணுமாம். வந்தூட்ரா பி. ஏ. வையும் பி. ஏ., ஹானர்ஸையும் பாஸ் பண்ணிட்டு. எங்காவது ஏர் உழப்போறதுதானே. வர்த்தகம் பண்ரதுதானே. பிராம்மணுத்தான் பாவம் வேறே வழியில்லாதவா. இந்தச் சூத்ரக் கழுதைகளுக்கென்ன? (அப்ளிகேஷனைக் கிழித்து நசுக்கிவிடுகிருள்) பியூன்! பியூன்!

சேவகன்:—அம்மா! (என்று வெளியிலிருந்து ஓடி வருகிருன்.

பங்க:—எங்கே இந்த குமாஸ்தாக்களெல்லாம் ஒருத்தரும் வரல்லெயா? எங்கே இந்த பாலையன், அப்காரி குமாஸ்தா

சேவகன்:—அம்மா! பாலைய ரெட்டியார் காலெமெ ஆபீசுக்கு போகணுமின்னு சொல்லிண்டு இருந்தாரம்மா.

பங்க:—ஆபீசுக்கா! இந்தப் பயலுக்கென்ன கர்வம் பிடிச்சு போச்சு! துணி வாங்கி வைச்சிருக்கு; தையற்காரனை

அழைச்சிண்டு வரச்சொல்லி சொல்லியிருந்தேனே. ஜாக்கிட் புதுமாதிரியிலே வெட்டித் தச்சாகணுமே சீக்கிரம்.

அந்த ரங்கன், ராமன் ஒருத்தருங்கூட என் வாலிலெ இன்னைக்கு?

சேவகன்:—ரங்கப்பிள்ளை, ராம நாயுடு எல்லாரும் ஆபீசுக்குத் தான் அம்மா போயிருக்காங்கோ. ஜமாபந்திக்காக வேலை ரொம்ப இன்னு சொல்லிண்டு இருந்தாங்கொ.

பங்க:—என்னடா கழுதை! ஜமாபந்தியாவது கிமாபந்தியாவது. ஆத்தலே வேலையில்லையா? ஆத்து வேலையை கவனிச்சுட்டன்னோ ஆபீசு வேலையை கவனிக்கணும்? இல்லே இந்தச் சூத்திரப் பயலுகளுக்கு ரொம்ப கர்வம்தான் பிடிச்சிப்போயிருக்கு; ஆகட்டும் சொல்ரேன். இந்த மூணு சூத்ராதான் இங்கே ஆபீசிலே இருக்கவா. இவாளை எங்கேயாவது தொலைக்கணும் வெளியே. கார் வராப்போல இருக்கு; ஐயாவா பாரு!

சேவகன்:—(எட்டிப் பார்த்துவிட்டு) ஆமாம் அம்மா ஐயா தான்.

(ராஜகோபால் I. C. S. உள்ளே வருகிறார். சுதர்சன அய்யர் உடன் வருகிறார்.)

(ராஜகோபால் துரையைப்போல் உடுத்து மீசை வைத்துக்கொண்டு இருக்கிறார். வந்ததும் கைகளைப் பின்புறம் நீட்ட, குமாஸ்தா கோட்டைக் கழற்றினதும் நாற்காலியில் உட்காருகிறார். குமாஸ்தா பூட்சு கழற்ற காலண்டை உட்காருகிறார். பங்கஜம் சுதேசமித்திரன் படித்துகொண்டிருக்கிறாள்.)

ராஜ:—சுதர்சனய்யர்! வேண்டாம், நீர் வெளியே போய் இரும். (குமாஸ்தா எழுந்து வெளியே போகிறுர்)

(பங்கஜத்தைப்பார்த்து) இன்னும் இந்தத் தமிழ்ப் பேப்பரைத்தான் படிச்சிண்டு இருக்கையா? ஹிண்டு பார்க்கிறதுதானே. முதல்லெ கொஞ்சம் கஷ்டமாத்தான் இருக்கும். இங்கிலீஷ் படிக்க ஆரம்பிச்சு ஆறுமாசமாரதே இன்னுமா சங்கோசப்பட்ராது?

பங்க:—உம்! உமக்கென்ன வேலையில்லே.

ராஜ:—சரி, என்னைத் தேடிண்டு யார் யார் வந்தா சொல்லு.

பங்க:—ஒருத்தருமில்லே; ஒரு சூத்திரப் பய்யெ வந்தது, அப்ளிகேஷனை ஒண்ணை தூக்கிண்டு. பி. ஏ. (ஹானர்ஸாம்).

ராஜ:—அப்ளிகேஷனை குடுத்துட்டு போயிருக்கானு? நான் சார்ஜ் வாங்கிண்ட பிறகு, வரிசையா பதினைந்து பிராமணுளுக்கே வேலே குடுத்துண்டு வந்திருக்கேன். போர்ட்லே இருந்து கேள்வி கேட்டிருக்கான், என் சூத்ராளுக்கு கொடுக்கலே இன்னு.

பங்க:—சூத்ராளிடமிருந்து அப்ளிகேஷன் வரல்லெ இன்னு போச்சு.

ராஜ:—அப்படித்தான் எழுதப்போரேன். இருந்தாலும் அந்த அப்ளிகேஷன் இருந்தா கொடு பார்ப்போம்.

பங்க:—(கிழித்து நசுக்கிய உருண்டையைக் கையில் எடுத்துக் காட்டி) இதோ இருக்கு (என்று கொடுக்கிறுள்.)

ராஜ:—(சிரித்து) நல்ல வேலே செசுடே! இந்தக் கவர்ன் மெண்டிலே அன்றோ தொந்தரவு செயரான். இல்லாட்டாக்கே நம் இஷ்டப்படி பிராமணுளுக்கு வேலே கொடுத்துண்டுபோலாம்.

பங்க:—இப்போ எத்தனை பேர் இருக்கா சூத்ரா இந்த ஜில்லாவிலே?

ராஜ:—நூற்றுக்கு பதினாறுபேர் இருக்கா.

பங்க:—பதினாறு பேரா! என் இவ்வளவு பேர்? சூத்ராளுக்கென்ன வேறே தொழிலா இல்லே. நீங்கள் இந்த ஜில்லாவிலே இருக்கவரை ஒரு சூத்ரனையும் வேலைக்கு வைக்கக்கூடாது; அப்படி வைக்கரது இன்னா என்னோடே பேசவேண்டாம்.

ராஜ:—(சிரித்துக்கொண்டே) சரி வைக்கலே.

பங்க:—(சந்தோஷத்துடன்) அதுதான் சரி! ஆமாம், இன்னைக்கு சுதேசமித்திரனிலே கவர்ன்மெண்ட் உத்தியோகங்களுக்குப் போகப்படாது, உத்தியோக வேட்டை செயாது தேசத் துரோகம் பண்ரதாகும் என்றெல்லாம் எழுதியிருக்கே, என் இப்படியேத்தான் பல தடவை எழுதிண்டு வர்ரா; என் பிராம்ண பத்திரிகையா இருந்து இப்படி எழுதாது?

ராஜ:—அதெல்லாம் வெறும்மெ இந்தச் சூத்திராளை எய்க்கிறத்துக்கு எழுதரா. உண்மையிலே அப்படி ஒண்ணுமில்லே. காங்கிரஸ் பார்ட்டியிலே சேர்ந்த பெரிய பிராம்மணாள் எல்லாம் தங்கள் பிள்ளைகள் உறவினர்களுக்கு கவர்ன்மெண்டு உத்தியோகத்திற்காக சிபார்சுசெய்லேயா இன்னா! ரங்காசாரியார் இன்னு ஒருத்தர் கவர்னர் ஜனரல் சபையிலேகூட மெம்பரா இருக்கார். அவர் காங்கிரஸ்கார்தான். அவர் பிள்ளை ஒரு பாஸும் பண்ணலே. அப்பேர்பட்டவனுக்கு போஸ்ட்டாபீஸில் எடுத்ததும் ரூ. 300 சம்பளத்தில் சூபரின்டென்ட்டென்ட் வேலெவாங்கிக் கொடுக்கலேயா இன்னா?

கவர்ன்மெண்ட் உத்தியோகங்களிலே நம்மவாள் நிறைய இருக்கிறதைக் கண்டு இந்தச் சூத்ரக்கட்சியார் தங்கள் பேபர்களிலே எழுதுவதும், மீட்டிங்குகளிலே பேசுவதும், கவர்ன்மெண்டாரை தங்களுக்கு நிறைய வேலைகளைக் கொடுக்கும்படி கேப்பதுமா இருக்கா. சூத்ரா, கவர்ன்மெண்டுவேலைகளுக்காக,இப்படிமுயற்சி பண்ண வொட்டாமை தடுப்பதற்காகவே உத்தியோக வேட்டை கூடாது இன்னு நம்மவா சொல்ரதே யொழிய வேறென்ன?

பங்க:—சரிதான்; அப்போ நீங்கள் மாத்திரம் எனக்கு இன்னைக்கு கொடுத்த வாக்கை மறக்கப்படாது. வேலைக்கு அப்ளிகேஷன் வந்தா வீட்டுக்குக்கொண்டுவரச் சொல்லுங்களேன். நான்பார்த்துக்கொள்றேன் பிறகு. தபால் ஆத்லே ஒடைக்கரச்சே தபாலில்வர அப்ளிகேஷனை யெல்லாம் நானே பார்த்து எடுத்துக்கிறேன்.

ராஜ:—சரிதான் அப்படியே ஆகட்டும். பிராந்திபுட்டி எடுத்துண்டுவரச் சொல்லு.

பங்க:—பியூன்! பியூன்!!

சேவகன்:—அம்மா! (ஓடி வருகிருன்.)

பங்க:—பிராண்டி பாட்டல்!

(புட்டியும் டம்ளரும் கொண்டுவந்து புட்டியை உடைத்து டம்ளரில் விட்டுக் கொடுக்கிருன்.)

ராஜாகோபாலய்யர் வாங்கிச் சாப்பிட்டுவிட்டு கையில் சிகரெட் ஒன்றை எடுத்துக்கொண்டு அறைக்குள் போகிருர்.

பங்க:—(தனியே ஆர்வத்தோடு) நான் இந்த ஜில்லாவிலே இருக்கும்வரையிலே எப்படி ஒரு சூத்ரன் முன்னுக்கு வர்ரான் பார்க்கிறேன்!

முற்றும்

குமரன் பிரஸ், காஞ்சீபுரம்.

இதைக் கவனியுங்கள்.

சமத்துவம், சகோதரத்துவம், பிறப்பில் உயர்வு தாழ்வின்மை, பெண்சுதந்தரம் முதலிய அரிய நீதிகளைப் போதிக்கும் சிறந்த பண்டைத் தமிழ் நூலாகிய "திருக்குறளை" உரையுடன் 8 அணுவிற்கு கொடுக்கின்றோம். தேவைக்கு உடனே எழுதுங்கள். தாமதித்தால் கிடைக்காது.

இப்புத்தகத்தைப் பற்றிய பல சிறந்த பத்திரிகைகளின் மதிப்புரைகளின் சுருக்கம் கீழ் வருமாறு:—

திராவிடன்:-திருக்குறள் "ஒரு குலத்துக்கொரு நீதி" போன்ற நீதிகளை உடையதன்று என்று தெளிவாக விளக்குகின்றது. இது ஒவ்வொரு தமிழ்மகனது கையிலும் அவசியம் எப்பொழுதும் இருக்க வேண்டியது என்று நாம் வற்புறுத்திக்கூறுகிறோம். சுமார் இரண்டு ரூபாய் மதிப்புள்ள இத்துணைச்சிறந்த நல்லுரையை 8 அணுவிற்கே உதவுவது பெரிதும் போற்றத்தக்கது. 11-10-29.

தமிழ்நாடு:-தமிழ் மக்கள் யாவரும் திருக்குறளைப் படித்துப் பயன்பெறுமாறு பதிப்பாளருடைய நன்னோக்கத்தால் குறைந்த விலையில் வெளியிட்டிருக்கின்றனர். 17-8-29.

சுதேச மித்திரன்:- * * * எல்லோருக்கும் பயன்படும்படி இப்பொழிப்புரை எழுதப்பட்டிருக்கிறது. சிறு வயதினின்றே இப்படி திருக்குறளைப் பரவச்செய்ய உத்தேசம் கொண்ட இவரது நோக்கம் ஈடேறிற்று. அச்சு முதலியன வெகு நேர்த்தி. 25-9-29.

குடி அரசு:- தமிழ் மக்கள் யாவரும் இதனை வாங்கிப் படித்து உண்மையை அறியும்படி வேண்டுகின்றோம். ஏறக்குறைய 300 பக்கங்கள் கொண்ட இப்பெரிய நூலுக்கு, * * * அமைத்துள்ள விலை அணு எட்டு என்பது மிகமிகச் சிறிய தொகை என்று நாம் கருதுகின்றோம். இந்நூல் மிக அழகாக மிகமிகத் தெளிவாக அச்சிடப்பெற்று வலிமையாக கட்டவம் பெற்றுள்ளது. 29-9-29.

நவசக்தி:-இப்பதிப்பு சுத்தமாயும், எளிய இனிய தமிழில் எழுதப்பட்ட பொழிப்புரையுடனும் கூடியிருக்கிறது. நன்றாகப் பதிப்பிக்கப்பட்டிருக்கிறது. * * * இந்நூலின் பெருமையை இப்பொழுதே தமிழ் நாட்டார் உணர ஆரம்பித்திருக்கின்றன ரென்பது தெரியக் கிடக்கின்றது. 5-6-29.

மானேஜர்,

குடி அரசு பதிப்பகம், ஈரோடு.

43, 55, 56

குடி அரசு பதிப்பக வெளியீடு.

1.	ஞானசூரியன்	... 0	4	0
2.	இதிகாச ஆராய்ச்சி அல்லது இராமாயணத்தின் ஆபாசம் (பாலகாண்டம்)	... 0	4	0
3.	இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு	... 0	2	0
4.	சுயமரியாதைத் தாலாட்டு	... 0	2	0
5.	சோதிடக் கும்மி	... 0	2	0
6.	மனுநீதி மருமம்	... 0	2	0
7.	பங்கஜம் அல்லது பார்ப்பனக் கொடுமை ஒரு சிறந்த நாடகம்	... 0	4	0
	புராண ஆபாசங்கள். (அச்சில்)			
	சாமிகளின் அடிமைகள்	... 0	12	0
	திருக்குறள் **1330**-குறளுக்கும் மூலமும் பொழிப்புரையுடன்	... 0	8	0
	மேயோ கூற்று மெய்யா-பொய்யா?	... 0	4	0
	சுயமரியாதைப் பாடல்கள்	... 0	2	0

கைவல்ய சுவாமிகள் கட்டுரை; குடி அரசுக் கோவை முதலியவைகள் விரைவில் வெளிவரும்.

மானேஜர்,

குடி அரசு பதிப்பகம்,

ஈரோடு.

[குமரன் பிரஸ், காஞ்சீபுரம்.]